# Padasalai's

## Telegram Groups!

( தலைப்பிற்கு கீழே உள்ள லிங்கை கிளிக் செய்து குழுவில் இணையவும்! )

- Padasalai's NEWS - Group
https://t.me/joinchat/NIfCqVRBNj9hhV4wu6_NqA

- Padasalai's Channel - Group
https://t.me/padasalaichannel

- Lesson Plan - Group
https://t.me/joinchat/NIfCqVWwo5iL-21gpzrXLw

- 12th Standard - Group
https://t.me/Padasalai_12th

- 11th Standard - Group
https://t.me/Padasalai_11th

- 10th Standard - Group
https://t.me/Padasalai_10th

- 9th Standard - Group
https://t.me/Padasalai_9th

- 6th to 8th Standard - Group
https://t.me/Padasalai_6to8

- 1st to 5th Standard - Group
https://t.me/Padasalai_1to5

- TET - Group
https://t.me/Padasalai_TET

- PGTRB - Group
https://t.me/Padasalai_PGTRB

- TNPSC - Group
https://t.me/Padasalai_TNPSC

www.Padasalai.Net www.TrbTnpsc.com

வகுப்பு : **12** **தமிழ்**

### 1 - மதிப்பெண் வினாக்கள்

**இயல் 1**

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒரே சேரப் பேசுகின்ற இலக்கண நூல்
   அ) யாப்பெருங்கலக் காரிகை ஆ) தண்டியலங்காரம்
   இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்
   **விடை : தொல்காப்பியம்**

2. 'மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்குதற்கு'
   கவிஞர் குறிப்பிடும் பழமை நலம்
   க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது
   உ) பொதிகையில் தோன்றியது
   ங) வள்ளல்களைத் தந்தது
   அ) க மட்டும் சரி ஆ) க, உ இரண்டும் சரி
   இ) ங மட்டும் சரி ஈ) க, ங இரண்டும் சரி
   **விடை : ஈ) க, ங இரண்டும் சரி**

3. மின்னோர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது
   தன்னோர் இலாத தமிழ் – இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடை நயம்
   அ) அடிமோனை, அடி எதுகை ஆ) சீர்மோனை, சீர் எதுகை
   இ) அடி எதுகை, சீர்மோனை ஈ) சீர் எதுகை, அடிமோனை
   **விடை : இ) அடி எதுகை, சீர்மோனை**

4. **கருத்து 1:** இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய், பயனிலை என்று வருவதே மரபு
   **கருத்து 2:** தொடரமைப்பு, சங்கப்பாடல்கள் பிறழ்ந்து வருகிறது.
   அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி
   இ) இரண்டு கருத்தும் சரி ஈ) கருத்து 1 சரி 2 தவறு
   **விடை : கருத்து 2 சரி**

5. **பொருத்துக.**
   அ) தமிழ் அழகியல் – 1. பரலி.சு.நெல்லையப்பர்
   ஆ) நிலவுப்பூ – 2. தி.சு.நடராசன்
   இ) கிடை – 3. சிற்பி பாலசுப்ரமணியம்
   ஈ) உய்யும் வழி – 4. கி.ராஜநாராயணன்
   அ) 4,3,2,1 ஆ) 1,4,2,3 இ) 2,4,1,3 ஈ) 2,3,4,1
   **விடை : ஈ) 2,3,4,1**

6. **பிழையான தொடரைக் கண்டறிக.**
   அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்.
   ஆ) மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.
   இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.
   ஈ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின.
   **விடை : இ)காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.**

7. **பேச்சுத்தமிழில் அமைந்த தொடரைத் தேர்க.**
   அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத்தெரியும்
   ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது
   இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது
   ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன.
   **விடை : அருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்**

8. 'ஒரு கிராமத்து நதி' என்னும் கவிதை நூலிற்காக சாகித்திய அகாதெமி விருது பெற்றவர்.
   **விடை : சிற்பி பாலசுப்ரமணியம்**

9. காவ்யதர்சம் என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி எழுதப்பட்ட நூல்
   **விடை : தண்டியலங்காரம்**

**இயல் 2**

10. **பொருத்துக.**
    அ) குரங்குகள் – 1. கன்றுகளைத் தவிர்த்தன
    ஆ) பசுக்கள் – 2. மரங்களிலிருந்து வீழ்ந்தன
    இ) பறவைகள் – 3. குளிரால் நடுங்கின
    ஈ) விலங்குகள் – 4. மேய்ச்சலை மறந்தன
    அ) 3,1,2,4 ஆ) 3,1,4,2 இ) 3,2,1,4 ஈ) 2,1,3,4
    **விடை : 3,1,2,4**

11. நரம்புகளுள் வீணை மீட்டிக்கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது
    அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள்
    இ) மழைத்துளிகள் ஈ) நீர்நிலைகள்
    **விடை : மழைத்துளிகள்**

12. வெள்ளச்சமவெளிகள் அழியக் காரணம்
    அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல்
    இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடிநீர் உறிஞ்சப்படுதல்
    **விடை : மணல் அள்ளுதல்**



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

13. ‘பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தன’ தடித்த சொல்லின் இலக்கணக் குறிப்பு
அ) வினைத்தொகை ஆ) உரிச்சொல்தொடர்
இ) இடைச்சொல் தொடர் ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்
**விடை : ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்**

14. தமிழில் திணைப்பாகுபாடு ---- அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது
அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு
இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு
**விடை : பொருட்குறிப்பு**

15. ‘உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே அஃறிணை என்மனார் அவரல பிறவே’ இந்நூற்பா இடம்பெற்ற இலக்கண நூல் ----
அ) நன்னூல் ஆ) அகத்தியம்
இ) தொல்காப்பியம் ஈ) இலக்கண விளக்கம்
**விடை : தொல்காப்பியம்**

16. யார்? எது? ஆகிய வினாச்சொற்கள் பயனிலையாய் அமைந்து, உணர்த்தும் திணைகள் முறையே ----
அ) அஃறிணை, உயர்திணை ஆ) உயர்திணை, அஃறிணை
இ) விரவுத்திணை, அஃறிணை ஈ) விரவுத்திணை, உயர்திணை
**விடை : உயர்திணை, அஃறிணை**

17. ‘இன்று’ என்ற கவிதைக் குறும்படத்தை வெளியிட்டவர்
**விடை : அய்யப்ப மாதவன்**

## இயல் 3

18. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை ----
அ) அறவோர், துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும்
இ) மன்றங்களும், அவைகளும் ஈ) நிதியமும் சுங்கமும்
**விடை : ஆ) திருமணமும் குடும்பமும்**

**19. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.**
அ) உரிமைத்தாகம் – 1. பாரசீகக் கவிஞர்
ஆ) அஞ்ஞாடி – 2. பூமணி
இ) ஜலாலுத்தீன்ரூமி – 3. பக்தவச்சல பாரதி
ஈ) தமிழர் குடும்ப முறை – 4. சாகித்திய அகாதெமி
அ) 2,4,3,1 ஆ) 3,4,1,2 இ) 2,4,1,3 ஈ) 2,3,4,1
**விடை : 2,4,1,3**

20. இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாத்துதீன் ரூமி குறிப்பிடுவது
அ) வக்கிரம் ஆ) அவமானம்
இ) வஞ்சனை ஈ) இவை அனைத்தும்
**விடை : ஈ. இவை அனைத்தும்**

21. உவா உறவந்து கூடும் உடுபதி, இரவி ஒத்தார் யார் யார்?
அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன்
இ) இராமன்,சுக்கிரீவன் ஈ) இராமன், சவரி
**விடை : இ) இராமன்,சுக்கிரீவன்**

22. பூமணி அவர்களால் எழுதப்பட்ட அஞ்ஞாடி என்பது
அ) சிறுகதை ஆ) புதினம் இ) நாடகம் ஈ) கவிதை
**விடை : புதினம்**

23. கடலின் பெரியது ----
அ) உற்ற காலத்தில் செய்த உதவி
ஆ) பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி
இ) தினையளவு செய்த உதவி
**விடை : பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி**

24. வையகமும் வானகமும் ஆற்றலரிது – எதற்கு?
அ) செய்யாமல் செய்த உதவி ஆ) பயன்தூக்கார் செய்த உதவி
இ) தினைத்துணை நன்றி ஈ) செய்ந்நன்றி
**விடை : செய்யாமல் செய்த உதவி**

**25. பொருத்துக.**
அ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் – 1. சேர்ந்தாரைக்கொல்லி
ஆ) பயன்தூக்கார் செய்த உதவி – 2. ஞாலத்தின் மாணப்பெரிது
இ) சினம் – 3. தெய்வத்துள் வைக்கப்படும்
ஈ) காலத்தினாற் செய்த நன்றி – 4. நன்மை கடலின் பெரிது
அ) 4,3,2,1 ஆ) 3,4,1,2 இ)1,2,3,4 ஈ) 2,3,4,1
**விடை : ஆ) 3,4,1,2**

## இயல் 4

26. ‘காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை’ இத்தொடரில் கலன் உணர்த்தும் பொருள்
அ) போர்க்கருவி ஆ) தச்சுக்கருவி
இ) இசைக்கருவி ஈ) வேளாண் கருவி
**விடை : இசைக்கருவி**



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

27.சுரதா நடத்திய கவிதை இதழ்

அ) இலக்கியம் ஆ) காவியம்

இ) ஊர்வலம் ஈ) விண்மீன்

**விடை : ஆ) காவியம்**

28.'விண்வேறு; விண்வெளியில் இயங்குகின்ற வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு' – இத்தொடர் தரும் முழுமையான பொருள்

அ) விண்ணும் வெண்மதியும் வேறு வேறு

ஆ) விண்வெளியும் செங்கதிரும் வேறு வேறு

இ) வெண்மதியும் முகிலும் வேறு

ஈ) விண், விண்வெளியில் உள்ள வெண்மதி, செங்கதிர், முகில், அனைத்தும் வேறு, வேறு.

**விடை : விண், விண்வெளியில் உள்ள வெண்மதி, செங்கதிர், முகில், அனைத்தும் வேறு, வேறு.**

29.**சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்க.**

அ) வசம்பு ஆ) மணத்தக்காளியிலைச்சாறு

இ) கடுக்காய் ஈ) மாவிலைக்கரி

**விடை : இ) கடுக்காய்**

30.குழிமாற்று எந்தத்துறையோடு தொடர்புடைய சொல்

அ) இலக்கியம் ஆ) கணிதம்

இ) புவியியல் ஈ) வேளாண்மை

**விடை : ஆ) கணிதம்**

31.இராசகோபாலன் என்னும் இயற்பெயர் கொண்ட கவிஞர்

அ) பாரதிதாசன் ஆ) சிற்பி பாலசுப்ரமணியம்

இ) சுரதா ஈ) சி.மணி

**விடை : இ) சுரதா**

32. **பொருத்துக:**

| | | |
|---|---|---|
| அ) மாச்சீர் | – 1. | கருவிளம், கூவிளம் |
| ஆ) காய்ச்சீர் | – 2. | நாள், மலர் |
| இ) விளச்சீர் | – 3. | தேமாங்காய், புளிமாங்காய் |
| ஈ) ஓரசைச்சீர் | – 4. | தேமா, புளிமா |

அ) 1,2,4,3 ஆ) 4,3,1,2 இ) 2,3,1,4 ஈ) 3,4,2,1

**விடை : ஆ) 4,3,1,2**

33.சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல, அது நம்பிக்கை மையம் – காரணம்

அ) நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகளின் களம்

ஆ) மென்பொருள், வன்பொரள், வாகன உற்பத்தியில் பங்கு

இ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை

ஈ) அ,ஆ இ அனைத்தும்

**விடை : ஈ) அ, ஆ, இ அனைத்தும்**

34. **கூற்று** : இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் நெசவாளர்கள் சென்னை நோக்கி வந்தனர்

**காரணம்** : கிழக்கிந்திய நிறுவனத்தின் வணிகம், துணி, சார்ந்ததாகவே இருந்தது.

அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று தவறு, காரணம் சரி

இ) கூற்று தவறு காரணம் தவறு ஈ) கூற்று சரி, காரணம் சரி

**விடை : ஈ) கூற்று சரி காரணம் சரி**

35.**பொருத்துக.**

| | | |
|---|---|---|
| அ. திருவல்லிக்கேணி ஆறு | – 1. | மாவலிப்புரச் செலவு |
| ஆ. பக்கிங்காம் கால்வாய் | – 2. | கல்கோடரி |
| இ. பல்லாவரம் | – 3. | அருங்காட்சியகம் |
| ஈ. எழும்பூர் | – 4. | கூவம் |

**விடை : 4,1,2,3**

36.'உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்' இத்தொடர் உணர்த்தும் பண்பு

அ) நேர்மறைப் பண்பு ஆ) எதிர்மறைப்பண்பு

இ) முரண்பண்பு ஈ) இவை அனைத்தும்

**விடை : முரண்பண்பு**

37.'விளியறி ஞமலி' –இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?

அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாழி

**விடை : இ) நாய்**

38.படிமம் என்பதன் பொருள்

அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) ஒலி

**விடை : இ) காட்சி**

39.'காலை இளம்வெயில் நன்றாக மேய, தும்பறுத்துத் துள்ளிவரும் புதுவெயில்' இக்கவிதையில் –––– பயின்று வந்தள்ளது.

அ) பயன்படிமம் ஆ) வினைப்படிமம்

இ) மெய்ப்படிமம் ஈ) உருப்படிமம்

**விடை : ஆ) வினைப்படிமம்**



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

40.கி.பி.1646 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி மதராஸ் நகரின் மக்கள் தொகை

அ) 19,000 ஆ) 18,000 இ)16,000 ஈ) 15,000

விடை : அ) 19,000

41. 'மனுமுறை கண்ட வாசகம்' என்ற உரைநடை நூலின் ஆசிரியர்

அ) பாரதியாரா் ஆ) மறைமலையடிகள்

இ) பரிதிமாற் கலைஞர் ஈ) இராமலிங்க அடிகள்

விடை : ஈ) இராமலிங்க அடிகள்

42.அகநானூற மணிமிடைப் பவளத்தில் உள்ள பாடல்கள் எண்ணிக்கை

அ) 100 ஆ) 180 இ)120 ஈ) 150

விடை : ஆ) 180

43.தோப்பில் முகமது மீரான் அவர்களின் சாகித்திய அகாதெமி பரிசு பெற்ற நூல்

அ) துறைமுகம் ஆ) கூனன்தோப்பு

இ) சாய்வு நாற்காலி ஈ) ஒரு குட்டித் திவின் வரைபடம்

விடை : இ) சாய்வு நாற்காலி

**இயல் 6**

44.ஏழ் ஆண்டு இயற்றி ஒர் ஈராறு ஆண்டில் சூழ்கடல் மன்னற்குக் காட்டல் – தொடர்களில் வெளிப்படும் செய்திகள்

1. மாதவி ஏழு ஆண்டுகள் வரை நாட்டியம் பயின்றாள்
2. ஈராறு வயதில் அரங்கேற்றம் செய்ய விரும்பினாள்

அ) 1 சரி 2 தவறு ஆ) 1 தவறு 2 சரி

இ) 1 தவறு 2 தவறு ஈ) 1 சரி 2 சரி

விடை : 1 சரி 2 சரி

45.பொருத்துக

அ) ஆமந்திரிகை – 1. பட்டத்துயானை

ஆ) அரசு உவா – 2. மூங்கில்

இ) கழஞ்சு – 3. இடக்கை வாத்தியம்

ஈ) கழை – 4. எடை அளவு

அ) 3 1 4 2 ஆ) 4 2 1 3 இ) 1 2 3 4 ஈ) 4 3 2 1

விடை : அ) 3,1,4,2

46.வேறுபட்டதைக் குறிப்பிடுக.

அ) அண்மைக்காட்சித் துணிப்பு ஆ) சேய்மைக் காட்சித்துணிப்பு

இ) நடுக்காட்சித் துணிப்பு ஈ) காட்சி மறைவு

விடை : ஈ) காட்சி மறைவு

47.ஐம்பெருங்காப்பியம் என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர்

அ) சிவஞான முனிவர் ஆ) மயிலைநாதர்

இ) ஆறுமுக நாவலர் ஈ) இளம்பூரணர்

விடை : ஆ) மயிலை நாதர்

48.கூற்று 1 : காப்பியம் என்னும் சொல் காப்பு + இயம் எனப் பிரிந்து மரபைக் காப்பது, இயம்புவது, வெளிப்படுவது, மொழியைச் சிதையாமல் காப்பது என்றெல்லாம் பொருள் தருகிறது.

கூற்று 2 : ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று நீலகேசி

அ) கூற்று 1 சரி கூற்று 2 தவறு ஆ) கூற்று 2 சரி கூற்று 1 தவறு

இ) இரண்டும் சரி ஈ) இரண்டும் தவறு

விடை : அ) கூற்று 1 சரி கூற்று 2 தவறு

49.சரியானவற்றைப் பொருத்தித் தேர்க.

அ) காதை – 1. கந்தபுராணம்

ஆ) சருக்கம் – 2. சீவகசிந்தாமணி

இ) இலம்பகம் – 3. சூளாமணி

ஈ) படலம் – 4. சிலப்பதிகாரம்

அ) 4,3,2,1 ஆ) 3,4,1,2 இ) 3,4,2,1 ஈ) 4,3,1,2

விடை : அ) 4,3,2,1

50.தவறான இணையைத் தேர்க

| பாவகை | | இலக்கியம் |
|---|---|---|
| அ) விருத்தப்பா | – | நாலடியார் |
| ஆ) ஆசிரியப்பா | – | அகநானூறு |
| இ) கலிவெண்பா | – | தூது |
| ஈ) குறள்வெண்பா | – | திருக்குறள் |

விடை : அ) விருத்தப்பா – நாலடியார்

51. கண்ணாடியாகும் கண்கள் நூலின் ஆசிரியர்

அ) சுரதா ஆ) நகுலன் இ) அப்துல் ரகுமான் ஈ) பாரதிதாசன்

விடை : ஆ) நகுலன்



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

52.'பிறனில் விழைவோர் கிளையொடுங் கெடுப' – என்னும் பாவிகம் இடம்பெறும் நூல்

அ) சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை
இ) கம்பராமாயணம் ஈ) சூளாமணி

**விடை : இ) கம்பராமாயணம்**

53.'ஆட்டனத்தி ஆதிமந்தி' நூலின் ஆசிரியர்

அ) கண்ணதாசன் ஆ) பாரதியார்
இ) பாரதிதாசன் ஈ) புலவர் குழந்தை

**விடை : அ) கண்ணதாசன்**

54.பெருங்காப்பியத்திற்குரிய நான்குவகை உறதிப் பொருள்களுளம் பிற உறுப்புகளும் முழுமையாக அமையப்பெற்ற விளங்கும் காப்பியம்

அ) கம்பராமாயணம் ஆ) சிலப்பதிகாரம்
இ) மணிமேகலை ஈ) சீவகசிந்தாமணி

**விடை : ஈ) சீவகசிந்தாமணி**

55.அல்லல் படுப்பதூஉம் இல் – எவரோடு பழகினால்?

அ) வாள்போல் பகைவர் ஆ) மெய்ப்பொருள் காண்பவர்
இ) எண்ணியாங்கு எய்துவர் ஈ) தீயினத்தார்

**விடை : ஈ) தீயினத்தார்**

56.திண்ணியர் என்பதன் பொருள்

அ) அறிவுடையவர் ஆ) மனஉறுதியுடையவர்
இ) தீக்காய்வார் ஈ) அறிவினார்

**விடை : ஆ) மனஉறுதியுடையவர்**

57.ஆராய்ந்து சொல்கிறவர்

அ) அரசர் ஆ) சொல்லியபடி செய்பவர்
இ) தூதுவர் ஈ) உறவினர்

**விடை : இ) தூதுவர்**

58. **பொருத்துக.**

அ) பாம்போடு உடன் உறைந்தற்று – 1.தீக்காய்வார்
ஆ) செத்தார் – 2.சீர் அழிக்கும் சூது
இ) வறுமை தருவது – 3.கள் உண்பவர்
ஈ) இகல்வேந்தர் சேர்ந்து ஒழுகுவார் – 4.உடம்பாடு இலாதவர்

அ) 1,2,3,4 ஆ) 2,3,4,1 இ) 4,1,3,2 ஈ) 4,3,2,1

**விடை : 4,3,2,1**

59. நடுங்கும்படியான துன்பம் இல்லாதவர்

அ) வரப்போவதை முன்னரே அறிந்து காத்துக்கொள்ளக் கூடியவர்
ஆ) மனத்திட்பம் உடையவர் இ) அரசரைச் சார்ந்து
ஈ) சூதாடுமிடத்தில் காலம் கழிப்பவர்

**விடை : அ) வரப்போவதை முன்னரே அறிந்து காத்துக்கொள்ளக் கூடியவர்**

60. எளியது, அரியது என்பன

அ) தீயினத்தின் துணை – நல்லினத்தின் துணை
ஆ) சொல்வது – சொல்லியபடி செய்வது
இ) சிறுமை பல செய்வது – பகைவர் தொடர்பு
ஈ) மெய்ப்பொருள் காண்பது – உருவுகண்டு எள்ளாதது

**விடை : ஆ) சொல்வது – சொல்லியபடி செய்வது**

## இயல் 7

61. 'பலர்துஞ்சவும் தாம் துஞ்சான்' – விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும்

அ) சோழன் நெடுங்கிள்ளியை, பாணர்
ஆ) சோழன் நலங்கிள்ளியை, கோவூர் கிழார்
இ) கணைக்கால் இரும்பொறையை, கபிலர்
ஈ) கரிகாலனை, உருத்திரங்கண்ணனார்

**விடை : ஆ) சோழன் நலங்கிள்ளியை கோவூர் கிழார்**

62. அதிசய மலரின் புன்னகையைப் பிடித்தவாறு தமிழ்நதி கடக்கச் சொல்வது

அ) கடந்தகாலத் துயரங்களை ஆ) ஆட்களற்ற பொழுதை
இ) பச்சையம் இழந்த நிலத்தை ஈ) அனைத்தையும்

**விடை : அ) கடந்தகாலத் துயரங்களை**

63. 'உண்டு பிறந்து வளர்ந்த இடந்தனில்' – இத்தொடரில் பெயரெச்சம்

அ) உண்டு ஆ) பிறந்து இ) வளர்ந்த ஈ) இடந்தனில்

**விடை : இ) வளர்ந்த**

64. யானைபுக்க புலம்போல – இவ்வுவமைக்குப் பொருத்தமான தொடர்

அ) தனக்குப் பயன்படும், பிறருக்குப் பயன்படாது
ஆ) தனக்கும் பயன்படாது, பிறருக்கும் பயன்படாது
இ) பிறருக்குப் பயன்படும், தனக்குப் பயன்படாது
ஈ) தனக்குப் பயன்படும், பிறருக்குப் பயன்படும்

**விடை : ஆ) தனக்கும் பயன்படாது, பிறருக்குப் பயன்படாது**



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

65. பின்வருவனவற்றுள் தொன்மத்திற்குப் பொருந்தா ஒன்றைத் தேர்க.

அ) கர்ணன் தோற்றான் போ
ஆ) வயதில் சிறியவள், ஆனாலும் தலைவி
இ) இந்த நாரதரிடம் எச்சரிக்கையாக இரு.
ஈ) இந்தா போறான் தருமன்

**விடை : ஆ) வயதில் சிறியவள், ஆனாலும் தலைவி.**

66. 'சாபவிமோசனம்', 'அகலிகை' கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர்

அ) கு.அழகிரிசாமி ஆ) புதுமைப்பித்தன்
இ) ஜெயமோகன் ஈ) எஸ்.இராமகிருஷ்ணன்

**விடை : புதுமைப்பித்தன்**

67. பண்புக்குறியீடுகளைக் கதைமாந்தர்களோடு பொருத்துக.

அ) அறம் – 1. கர்ணண்
ஆ) வலிமை – 2. மனுநீதிச்சோழன்
இ) நீதி – 3. பீமன்
ஈ) வள்ளல் – 4. தருமன்

அ) 3,2,1,4 ஆ) 4,3,2,1 இ) 2,4,3,1 ஈ) 4,3,1,2

**விடை : ஆ) 4,3,2,1**

68. வெ.இறையண்பு எழுதிய நூல்களுள் தமிழ் வளர்ச்சித் துறையின் பரிசு பெற்ற நூல்

அ) வாய்க்கால் மீன்கள் ஆ) ஏழாவது அறிவு
இ) உள்ளொளிப் பயணம் ஈ) மூளைக்குள் சுற்றுலா

**விடை : வாய்க்கால் மீன்கள்**

69. தமிழ் நதி – எழுதாத நூலைத் தேர்க.

அ) நந்தகுமாரனுக்கு மாதங்கி எழுதியது ஆ) ஈழம்
இ) கானல் வரி ஈ) பாரதமக்களின் பரிதாபச் சிந்து

**விடை : ஈ) பாரதமக்களின் பரிதாபச் சிந்து**

70. 'வையகம் முழுவதும் வறிஞன் ஓம்பும் ஓர் செய் எனக் காத்து இனிது அரசு செய்கின்றான்' இவ்வரிகள் இடம்பெறும் நூல்

அ) பட்டினப்பாலை ஆ) புறநானூறு
இ) அறநெறிச்சாரம் ஈ) கம்பராமாயணம்

**விடை : கம்பராமாயணம்**

## இயல் 8

71. சிறுபாணாற்றுப்படை காட்டும் பாட்டுடைத் தலைவனின் இன்றைய நிலப்பகுதி

அ) உதகமண்டலம் ஆ) விழுப்புரம்
இ) திண்டிவனம் ஈ) தருமபுரி

**விடை : திண்டிவனம்**

72. பொருந்தாத ஒன்றைக் கண்டறிக.

அ) தனித்தமிழ்த் தந்தை – 1. மு.வரதராசனார்
ஆ) ஆராய்ச்சிப் பேரறிஞர் – 2. மயிலை சீனி.வேங்கடசாமி
இ) தமிழ்த்தென்றல் – 3. திரு.வி.க
ஈ) மொழிஞாயிறு – 4. தேவநேயப் பாவாணர்

**விடை : அ) தனித்தமிழ்த் தந்தை – 1. மு.வரதராசனார்**

73. ச.த.சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை சீனி.வேங்கடசாமி எழுதிய நூல்

அ) பௌத்தமும் தமிழும் ஆ) இசுலாமும் தமிழும்
இ) சமணமும் தமிழும் ஈ) கிறித்துவமும் தமிழும்

**விடை : கிறித்துவமும் தமிழும்**

74. கடையெழு வள்ளல்களின் வரிசையைச் சாராத மன்னர்கள்

அ) ஆய் அண்டிரனும் அதிகனும் ஆ) நல்லியக்கோடனும் குமணனும்
இ) நள்ளியும் ஓரியும் ஈ) பாரியும் காரியும்

**விடை ; ஆ) நல்லியக்கோடனும் குமணனும்**

75. குறியீடுகளைப் பொருத்துக.

அ) பெண் – 1. சமாதானம்
ஆ) புறா – 2. வீரம்
இ) தராசு – 3. விளக்கு
ஈ) சிங்கம் – 4. நீதி

அ) 2,4,1,3 ஆ) 2,4,3,1 இ) 3,1,4,2 ஈ) 3,1,2,4

**விடை : 3,1,4,2**

76. **கூற்று 1** : 19–ஆம் நூற்றாண்டில் குறியீட்டியம் ஓர் இலக்கியக் கோட்பாடாக உருப்பெற்றது.

**காரணம்** : பொதலேர், ரைம்போ, வெர்லேன், மல்லார்மே முதலானவர்கள் குறியீட்டியத்தை வளர்த்தார்கள்.

அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று சரி, காரணம் சரி
இ) கூற்று தவறு, காரணம் தவறு ஈ) கூற்று தவறு, காரணம் சரி

**விடை : ஆ) கூற்று சரி காரணம் சரி**



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

77. சங்க இலக்கியத்தில் அகத்திணை மாந்தர்களின் உள்ளத்து உணர்வுகளைக் குறிப்பாக உணர்த்தும் குறியீடுகள்

அ) உவமை ஆ) உவமேயம்

இ) உத்தி ஈ) உள்ளுறை உவமை

**விடை : உள்ளுறை உவமை**

78. மறைத்துச் சொல்லவும் மிகுத்துச் சொல்லவும் அழுத்திச் சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்தி எது?

அ) குறியீடு ஆ) படிமம் இ) அங்கதம் ஈ) தொன்மம்

**விடை : குறியீடு**

79. கலிங்கம் என்பதன் பொருள்

அ) நாடு ஆ) வண்டு இ) ஆடை ஈ) நீலமணி

**விடை : ஆடை**

80. கிறித்துவக் கம்பர் என்று போற்றப்படுவர்

அ) கண்ணதாசன் ஆ) சி.மணி

இ) எச்.ஏ.கிருட்டிணனார் ஈ) வைரமுத்து

**விடை : எச்.ஏ.கிருட்டிணனார்**

**இலக்கணக்குறிப்பு**

**பண்புத்தொகை**

செம்பரிதி, செந்தமிழ்

செந்நிறம், வெங்கதிர்

புதுப்பெயல், கொடுங்கோல்,

தொல் நெறி

**வினைத்தொகை**

தாழ்கடல், வயங்குமொழி

வளர்தலம், காய்நெல்

**எண்ணும்மை**

அறிவும் ஒழுக்கமும்

ஆடலும் பாடலும்

**அடுக்குத்தொடர்**

முத்து முத்தாய், ஊன்ற ஊன்ற

**சொல்லிசையளபெடை**

வளைஇ, வெரீஇய

**செய்யுளிசையளபெடை**

சிறாஅர், உழாஅது

**ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்**

பொய்யா, அறியா, அடையா, மறவா

**உருவகம்**

வியர்வை வெள்ளம்

**உரிச்சொற்றொடர்**

மாமயிலை



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

வகுப்பு : **12** **தமிழ்**

## 2 - உறுப்பிலக்கணம் தருக

1. **சாய்ப்பான் = சாய் + ப் + ப் + ஆன்**
   காய் – பகுதி, ப் – சந்தி, ப் – எதிர்கால இடைநிலை
   ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி
2. **விம்முகின்ற = விம்மு + கின்று + அ**
   விம்மு – பகுதி, கின்று – நிகழ்கால இடைநிலை, அ – பெயரெச்ச விகுதி
3. **வியந்து = விய + த் (ந்) + த் + உ**
   விய – பகுதி, த் – சந்தி (ந்) – ஆனது விகாரம்
   த் – இறந்தகால இடைநிலை, உ – வினையெச்ச விகுதி
4. **விளங்கி = விளங்கு + இ**
   விளங்கு – பகுதி, இ – வினையெச்ச விகுதி
5. **கலங்கி = கலங்கு + இ**
   கலங்கு – பகுதி, இ – வினையெச்ச விகுதி
6. **வெகுளி = வெகுள் + இ**
   வெகுள் – பகுதி, இ – வினையெச்ச விகுதி
7. **சாற்றி = சாற்று + இ**
   சாற்று – பகுதி ; இ – வினையெச்ச விகுதி
8. **பொலிந்தான் = பொலி + த்(ந்) + த் + ஆன்**
   பொலி – பகுதி, த் – சந்தி, (ந்) – ஆனது விகாரம்
   த் – இறந்தகால இடைநிலை, ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி
9. **கண்டான் = காண்(கண்) + ட் + ஆன்**
   காண் – பகுதி, கண் – குறுகியது விகாரம், ட் – இறந்தகால இடைநிலை
   ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி
10. **அமர்ந்தான் = அமர் + த்(ந்) + த் + ஆன்**
    அமர் – பகுதி, த் – சந்தி, (ந்) – ஆனது விகாரம்
    த் – இறந்தகால இடைநிலை, ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி
11. **நினைக்கின்ற = நினை + க் + கின்று + அ**
    நினை – பகுதி, க் – சந்தி, கின்று – நிகழ்கால இடைநிலை,
    அ – பெயரெச்ச விகுதி
12. **செய்த = செய் + த் + அ**
    செய் – பகுதி, த் – இறந்தகால இடைநிலை, அ– பெயரெச்ச விகுதி
13. **பகைத்த = பகை + த் + த் + அ**
    பகை – பகுதி, த் – சந்தி, த் – இறந்தகால இடைநிலை,
    அ – பெயரெச்ச விகுதி
14. **ஈந்த = ஈ + த்(ந்) + த் + அ**
    ஈ – பகுதி, த் – சந்தி, (ந்) –ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை
    அ– பெயரெச்ச விகுதி
15. **தாங்கிய = தாங்கு + இன் + ய் + அ**
    தாங்கு – பகுதி, இன் – இறந்தகால இடைநிலை, ய் – உடம்படு மெய்,
    அ– பெயரெச்ச விகுதி
16. **வைத்து = வை + த் + த் + உ**
    வை – பகுதி, த் – சந்தி, த் – இறந்தகால இடைநிலை,
    உ– வினையெச்ச விகுதி
17. **அறிந்து – அறி + த் (ந்) + த் + உ**
    அறி – பகுதி, த் – சந்தி, (ந்) – ஆனது விகாரம்
    த் – இறந்தகால இடைநிலை, உ – வினையெச்ச விகுதி
18. **அறுத்து = அறு + த் + த் + உ**
    அறு – பகுதி, த் – சந்தி, த் – இறந்தகால இடைநிலை
    உ – வினையெச்ச விகுதி
19. **களைந்து = களை + த்(ந்) + த் + உ**
    களை – பகுதி, த் – சந்தி, (ந்) – ஆனது விகாரம்
    த் – இறந்தகால இடைநிலை, உ– வினையெச்ச விகுதி
20. **இடிந்து = இடி + த் (ந்) + த் + உ**
    இடி – பகுதி, த் – சந்தி, (ந்) – ஆனது விகாரம்
    த் – இறந்தகால இடைநிலை, உ – வினையெச்ச விகுதி
21. **பேசுவார் = பேசு + வ் + ஆர்**
    பேசு – பகுதி, வ் – எதிர்கால இடைநிலை,
    ஆர் – பலர்பால்வினைமுற்று விகுதி
22. **தொழுதனர் = தொழு + த் + அன் + அர்**
    தொழு – பகுதி, த் – இறந்தகால இடைநிலை, அன் – சாரியை
    அர் – பலர்பால் வினைமுற்று விகுதி
23. **பழித்தனர் = பழி + த் + த் + அன் + அர்**
    பழி – பகுதி, த் – சந்தி, த் – இறந்தகால இடைநிலை, அன் – சாரியை
    அர் – பலர்பால் வினைமுற்று விகுதி



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

24.நகை = நகு + ஐ

நகு – பகுதி (நகை ஆனது விகாரம்) ஐ – தொழிற்பெயர் விகுதி

25.மருட்கை = மருள் + கை

மருள் – பகுதி, (ள், ட் ஆனது விகாரம்) கை – தொழிற்பெயர் விகுதி

26.வெகுளி = வெகுள் + இ

வெகுள் – பகுதி, இ – தொழிற்பெயர் விகுதி

**பிரித்துப் புணர்ச்சி விதி காண்க.**

1. **செம்பரிதி = செம்மை + பரிதி**

விதி : ஈறு போதல் – செம் + பரிதி – செம்பரிதி

2. **செந்தமிழே = செம்மை + தமிழே**

விதி : ஈறுபோதல் – செம் + தமிழே

விதி : முன்னினற் மெய்திரிதல் – செந்தமிழே

3. **வெங்கதிர் = வெம்மை + கதிர்**

விதி : ஈறுபோதல் – வெம் + கதிர்

விதி : முன்னின்ற மெய் திரிதல் – வெங்கதிர்

4. **புதுப்பெயல் = புதுமை + பெயல்**

விதி : ஈறுபோதல் – புது + பெயல்

விதி : இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் – புதுப்பெயல்

5. **அருங்கானம் = அருமை + கானம்**

விதி : ஈறுபோதல் – அரு + கானம்

விதி : இனமிகல் – அருங்கானம்

6. **பெருங்கடல் = பெருமை + கடல்**

விதி : ஈறுபோதல் – பெரு + கடல்

விதி : இனமிகல் – பெருங்கடல்

7. **நன்மொழி = நன்மை + மொழி**

விதி : ஈறுபோதல் – நன் + மொழி – நன்மொழி

8. **வானமெல்லாம் = வானம் + எல்லாம்**

விதி : உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – வானமெல்லாம்

9. **உன்னைல்லால் = உன்னை + அல்லால்**

**விதி** : இ்ஈஐ வழி யவ்வும் – உன்னை + ய் + அல்லால்

விதி : உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே – உன்னையல்லால்

10. **தனியாழி = தனி + ஆழி**

**விதி** : இ்ஈஐ வழி யவ்வும் – தனி + ய் + ஆழி

விதி : உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே – தனியாழி

11. **ஒருமையுடன் = ஒருமை + உடன்**

**விதி** : இ்ஈஐ வழி யவ்வும் – ஒருமை + ய்+ உடன்

விதி : உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே – ஒருமையுடன்

12. **ஏழையென = ஏழை + என**

**விதி** : இ்ஈஐ வழி யவ்வும் – ஏழை + ய் + என

விதி : உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே – ஏழையென

13. **தலைக்கோல் = தலை + கோல்**

விதி : இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் – தலைக்கோல்

14. **ஆங்கவற்றுள் = ஆங்கு + அவற்றுள்**

விதி : உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் – ஆங்க் + அவற்றுள்

விதி : உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – ஆங்கவற்றுள்

15. **உள்ளொன்று = உள் + ஒன்று**

விதி : தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் – உள்ள் + ஒன்று

விதி : உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – உள்ளொன்று

16. **முன்னுடை = முன் + உடை**

**விதி** : தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் – முன்ன் + உடை

விதி : உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – முன்னுடை

17. **பூம்பாவாய் = பூ + பாவாய்**

விதி : பூப்பெயர் முன் இனமென்மையும் தோன்றும் – பூம்பாவாய்

**பொருளுணர்ந்து சொற்றொடரில் அமைத்தெழுதுக.**

1. **விலை, விளை, விழை**

கார்பருவத்தில் விளைந்த தானியங்களின் விலை குறையாமல் இருக்க ஏற்றுமதி நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ள விழைவதாக அரசு அறிவித்தது.

2. **தலை, தளை, தழை**

காட்டிற்குச் சென்ற கந்தன் வெட்டிய இலை தழைகளை கயிற்றைக் கொண்டு தளைந்து தலைக்கு மேல் வைத்துக்கொண்டு வீட்டிற்குத் திரும்பினான்.

3. **கலை, களை, கழை**

கழைக்கூத்தாடிகள் ஆடிஆடிக் களைத்துப் போனாலும் அவர்களுக்குக் அந்தக் கலையில் ஆர்வம் குறையாது.

4. **அலை, அளை, அழை**

கடல் அலைகளைக் கண்டு மகிழ்ந்து கொண்டிருந்த குழந்தைக்கு உணவு ஊட்ட உணவை அளைந்து கொண்டிருந்த தாய் குழந்தையை அழைத்தாள்



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

5. **களம், கலம்**
போர்க்களத்தில் புண்பட்ட வீரர்களுக்கு கலத்தில் நீர் தரப்பட்டது.
6. **புல், புள்**
புள்ளினங்கள் ஆர்க்கும் காலைப்பொழுதில் புல் நுனிகளில் பனி குவிந்திருக்கும்.
7. **உழை, உளை**
உளையில் புதைந்தாலும் உழைத்துக்கொண்டு இருப்பது உழவனின் சிறப்பாகும்.
8. **கான், காண்**
அடர்ந்த கான் பகுதிகளில் தாவித்திரியும் மான் கூட்டங்களைக் காண்பதே சுகம்.
9. **ஊண், ஊன்**
ஊனை ஊணாகக் கொள்வது அறமாகுமா?
10. **தின்மை, திண்மை**
எவர்க்கும் தின்மை செய்யாது வாழ்வதே
வாழ்விற்குத் திண்மை சேர்க்கும்.

**உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.**

1. தாமரை இலை நீர்போல
2. கிணற்று தவளைபோல
3. எலியும் பூனையும் போல
4. அச்சாணி இல்லாத தேர்போல
5. உள்ளங்கை நெல்லிக்கனி போல

**வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

1. என்னுடைய நம்பிக்கை முழுவதும் புதியத் தலைமுறை மீதுதான்; அவர்கள் எல்லா பிரச்சனைகளையும் ஒரு சிங்கத்தை போல எதிர்கொண்டுத் தீர்ப்பார்கள்.
**விடை** : என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதிய தலைமுறை மீதுதான்; அவர்கள் எல்லாப் பிரச்சனைகளையும் ஒரு சிங்கத்தைப் போல எதிர்கொண்டு தீர்ப்பார்கள்.
2. எத்தனை முறை நீ மற்றவர்கள் முன்னேறி செல்வதனை கண்டு ஒன்றும் செய்வதறியாது நம்பிக்கையில் துன்புறுவாய்; நிறைய தன்னம்பிக்கை கொள்.
**விடை** : எத்தனை முறை நீ மற்றவர்கள் முன்னேறிச் செல்வதனைக் கண்டு ஒன்றும் செய்வதறியாது நம்பிக்கையின்றி துன்புறுவாய், நிறைய தன்னம்பிக்கை கொள்.
3. நம் வாழ்க்கையின் தரம் தமது கவனத்தின் தரத்தை பொறுத்திருக்கிறது. புத்தகம் படிக்கும் பொழுது கூர்ந்தக் கவனம் அறிவை பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படை தேவையாகும்.
**விடை** : நம் வாழ்க்கையின் தரம் தமது கவனத்தின் தரத்தைப் பொறுத்திருக்கிறது. புத்தகம் படிக்கும்பொழுது கூர்ந்த கவனம் அறிவைப் பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படைத் தேவையாகும்.
4. மாணவர்கள் பெற்றோர்களை தமது நண்பர்களாக பாவித்து நட்புக்கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களை பெற்றோர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.
**விடை** : மாணவர்கள் பெற்றோர்களைத் தமது நண்பர்களாகப் பாவித்து நட்புக்கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களைப் பெற்றோர்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும்.
5. ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை தெரிந்து கொண்டு, அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றை கற்று கொடுக்கும்.
**விடை** : ஆசிரியருக்குக் கீழ்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றைத் தெரிந்து கொண்டு, அறியாமையினை அகற்றிப் பல நல்லனவற்றைக் கற்றுக் கொடுக்கும்.

**பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக.**

1. **குமரன் வீடு பார்த்தேன்**
குமரனை வீட்டில் பார்த்தேன்
2. **மாறன் பேச்சுத்திறன் யார் வெல்ல முடியும்**
மாறனின் பேச்சுத்திறனை யாரால் வெல்லமுடியும்
3. **போட்டி வெற்றி பெற்றது கலைச்செல்வி பாராட்டுகள் குவிந்தன.**
போட்டியில் வெற்றி பெற்றதால் கலைச்செல்விக்குப் பாராட்டுகள் குவிந்தன.
4. **காலை எழுந்து படித்து நமக்கு நன்மை ஏற்படும்.**
காலையில் எழுந்து படித்தால் நமக்கு நன்மை ஏற்படும்.
5. **அனைவர் அன்பு அழைத்தவன் துன்பம் தர யார் மனம் வரும்.**
அனைவரையும் அன்பால் அழைத்தவனுக்குத் துன்பத்தைத் தர யாருக்கு மனம் வரும்.
6. **சான்றோர் மதிப்பு கொடுத்து வாழ்வு உயரலாம்.**
சான்றோர்களுக்கு மதிப்பைக் கொடுத்து வாழ்ந்தால் உயரலாம்.



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.**

1. **பலகை**
   பலகையால் ஆன மேசையில் உணவு உண்டனர்.
   பல கைகள் ஒன்றிணைந்து வெற்றியைத் தமதாக்கின.
2. **தாமரை**
   தாமரைகள் பூத்தால் குளத்துக்கு அழகு
   தா மரைகள் குதித்தால் கண்ணுக்கு அழகு
3. **கோவில்**
   கோவில்களுக்குச் சென்று இறைவனைத் தரிசித்து வரலாம் .பண்டைய மன்னர்களின் கண்டால் கொண்டாட்டாம் தான்.
4. **வெங்காயம்**
   வெங்காயம் உணவுக்கு அதிகம் பயன்படுகிறது.
   உடலில் ஏற்பட்ட வெங்காயங்கள் உறுத்தலைக் கொடுத்தன.
5. **தலைமை**
   எங்கள் பள்ளி ஆண்டு விழாவிற்கு எங்கள் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தலைமை தாங்கினார்.
   தலை மை பூசுதல் கண்களுக்குக் கேடு விளைவிக்கும்.

**பேச்சு வழக்கை எழுத்து வழக்கமாக மாற்றுக.**

1. **இப்ப எனக்குப் புரிஞ்சு போச்சு, நீயும் புரிஞ்சிக்கோ**
   **விடை** : இப்பொழுது எனக்குப் புரிந்துவிட்டது நீயும் புரிந்துகொள்.
2. **நிலத்தக் கொறனும்டா அப்பதான் வகுறு நிறையும்**
   **விடை** : நிலத்தைக் கிளற வேண்டுமடா! அப்போதுதான் வயிறு நிறையும்
3. **அன்னைக்கு அவனுக்குப் பணம் குடுத்து ஒதவியிருக்க வேண்டியதான.**
   **விடை** : அன்றைக்கு அவனுக்குப் பணம் கொடுத்து உதவியிருக்க வேண்டியது தானே.
4. **வூட்டாண்ட வெளையாண்ட கொயந்தையை அப்பா எங்க இஸ்துகினு போனாரு.**
   **விடை** : வீட்டின் அருகில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தையை அப்பா எங்கே இழுத்துக் கொண்டு சென்றார்.
5. **புள்ளைக்கு உடம்பு சரியில்லை மூணு நாளா சிரமப்படுது**
   **விடை** : குழந்தை உடல்நலக்குறைவால் மூன்று நாட்களாகச் சிரமப்பட்டுக் கொண்டுள்ளது.
6. **ரவைக்கு சித்தப்பன காவலுக்குப் போவ சொல்.**
   **விடை** : இரவில் சித்தப்பாவைக் காவல் காக்கச் செல்லுமாறு சொல்.

**அடைப்புக்குள் உள்ள பெயர்ச்சொல்லைத் தொடர்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக.**

1. **கபிலன் திறமையானவர் என்று ---- (குமரன்) தெரியும்.**
   கபிலன் திறமையானவர் என்று குமரனுக்குத் தெரியும்.
2. **நேற்று முதல் ---- (அணை) நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.**
   நேற்று முதல் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.
3. **உங்களுக்கு --- (யார்) நன்மை என நினைக்கிறீர்கள்**
   உங்களுக்கு யாரால் நன்மை என நினைக்கிறீர்கள்.
4. **முருகன் --- (வேகம்) சென்றும் பேருந்தைப் பிடிக்க இயலவில்லை**
   முருகன் வேகமாகச் சென்றும் பேருந்தைப் பிடிக்க இயலவில்லை.
5. **நம்முடைய ---- (தேவை) அளவு குறைந்தால் மகிழ்ச்சி பெருகும்.**
   நம்முடைய தேவையின் அளவு குறைந்தால் மகிழ்ச்சி பெருகும்.

**கீழ்க்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக.**

1. **வானம், பற, நிலவு, தொடு**
   வானத்தில் பறந்து நிலவைத் தொடுவோம்.
2. **சருகு, விழு, மண், அலை**
   சருகு விழுந்தது மண் அதை அலை கழித்தது.
3. **விண்மீன், ஒளிர், எரி, விழு**
   விண்மீன் ஒளிர்ந்தது, அதனால் இருள் எரிந்து விழுந்தது.
4. **குதிரை, வேகம், ஓடு, தாவு**
   குதிரை வேகமாக ஓடும். அதன்மேல் வேகமாகத் தாவு
5. **குழந்தை, நட, தளிர்நடை, விழு**
   குழந்தை விழுந்தது; எழுந்து தளிர்நடை நடந்தது.
6. **திரை, காண், கைதட்டல், மக்கள்**
   திரையில் காண்கின்ற காட்சிகளைக் கண்டு மக்கள் கைதட்டல் செய்து மகிழ்ந்தனர்.

**மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.**

1. **ஆற அமர**
   போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறுவது எப்படி என்பதை நண்பர்களுடன் ஆற அமர உட்கார்ந்து விவாதிக்க வேண்டும்.
2. **ஆணி அடித்தாற்போல**
   பட்டிமன்றத் தலைவர் தன் தீர்ப்புரையில் கூறிய கருத்துக்கள் ஒவ்வொன்றும் ஆணி அடித்தாற்போல அமைந்தன.



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

3. **அகலக்கால்**

தன் வருவாய்க்குத் தகுந்த செலவுகளைச் செய்யாமல் அகலக்கால் வைப்பது என்றும் ஆபத்தை உண்டாக்கும்.

4. **வழிவழியாக**

தமிழுக்கும் தமிழ்நாட்டிற்கும் பாடுபடுவது எங்கள் குடும்பம் வழிவழியாக மேற்கொண்டு வரும் பணியாகும்.

5. **கண் துடைப்பு**

நடந்த சம்பவத்திற்குத் தீர்வு காணாமல் விசாரணைக் கமிஷன் அமைத்தது வெறும் கண்துடைப்பு என்று சமூக ஆர்வலர்கள் கூறுகிறார்கள்.

**தொடரில் இடம்பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.**

1. **வாழைக்காட்டில் குயில்கள் அலறிக்கொண்டும் காகங்கள் கூவிக்கொண்டும் இருந்தன.**

**விடை** : வழைத்தோப்பில் குயில்கள் கூவிக்கொண்டும் காகங்கள் கரைந்து கொண்டும் இருந்தன.

2. **முருகன் சோறு சாப்பிட்டுப் பால் குடித்தான்**

**விடை** : முருகன் சோறு உண்டு பால் பருகினான்

3. **கோவிந்தன் குடியிருக்க சுவர் கட்டி கூரை அமைத்தார்**

**விடை** : கோவிந்தன் குடியிருக்க சுவர் எழுப்பிக் கூரை வேய்ந்தார்.

4. **வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் குட்டியும் யானைக் குட்டியும் கண்டேன்**

**விடை** : வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் குருளையையும் யானைக் கன்றையும் கண்டேன்.

5. **ஆட்டத் தொழுவத்தைச் சுற்றிலும் எலிகள் பொந்துகள் அமைத்திருந்தன.**

**விடை** : ஆட்டுப் பட்டியைச் சுற்றிலும் எலி வளைகள் அமைத்திருந்தன.

6. **பனை மட்டையால் கூரை வைத்திருந்தனர்.**

**விடை** : பனை ஓலையால் கூரை வேய்ந்திருந்தனர்.

**நெடுவினா (இருபக்கங்களுக்கு மிகாமல் விடை தருக)**

1. செய்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணை கொண்டு நிறுவுக.
2. சினத்தைக் காத்தல் வாழ்வை மேன்மைப்படுத்தும் – இக்கூற்றை முப்பால் வழி விரித்துரைக்க.
3. அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணை நிற்கும் என்பதை வள்ளுவம் வழிநின்று நிறுவுக.
4. திருக்குறள் ஒரு வாழ்வியல் இலக்கியம் – நிறுவுக.
5. 'நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து' என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடல் கருத்துக்களை தொகுத்து எழுதுக.
6. குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது. எவ்வாறு விளக்குக.
7. பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக.
8. 'ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு' நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த ஒரு நகரம் குறித்து இருபக்க அளவில் கட்டுரை எழுதுக.
9. பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று, ஆகியவற்றை விவரிக்க.
10. பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்புநலத்தை விவரிக்க.
11. 'உரிமைத்தாகம்' கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல்... இருந்திருந்தால் கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.
12. 'சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு' –இக்கூற்றை நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை?
13. மகாநடிகரைக் கண்ட பாலச்சந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.

வகுப்பு : 12 **தமிழ்**

**பகுதி - I பிரிவு - III**

* இப்பிரிவில் நான்கு வினாக்கள் (15,16,17,18) இடம் பெற்றிருக்கும்
* எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க வேண்டும்.
* ஒவ்வொரு வினாவுக்கும், தலா இரண்டு மதிப்பெண்கள் வழங்கப்படும்
* கீழ்கண்ட வினாக்களிலிருந்து இப்பிரிவுக்கான நான்கு வினாக்கள் தேர்ந்தெடுக்கப்படும்.

1. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட தமிழின் துணை வேண்டும் என்கிறார்?
 > உழைத்துச் சிவந்த தொழிலாளர்களின் கைகளையும்,
 > அவர்களின் உடலில் தோன்றும் வியர்வை முத்துகளையும் வியந்து பாடத் தமிழின் துணை வேண்டும் என்று சிற்பி கூறுகிறார்.

2. 'நகரம் பட்டைத் தீட்டிய வெள்ளை வைரமாகிறது' – விளக்கம் தருக.
 > மழை பெய்ததால் நகரத்தின் மாசுகள் அகன்றன
 > திடீரெனத் தோன்றிய சூரியனின் வெளிச்சத்தால் மாசு நீங்கிய நகரம் புதுப்பொலிவு பெறுகிறது.

3. நிலையாமை குறித்து சவரி உரைக்கும் கருத்து யாது?
 > உன்னைக் கண்டதால் என் பொய்யான உலகப் பற்று அழிந்தது என்றும்,
 > அளவற்ற காலம் தான் செய்த தவம் பலித்துப் பிறவி ஒழிந்தது என்றும், இராமனைப் பார்த்து சவரி உரைத்தாள்

3. எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுதீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?
 > நம் வாழ்வில் ஏற்படும் அல்லது தோன்றும் ஆனந்தம், மனச்சோர்வு, அற்பத்தனம், விழிப்புணர்வு, வக்கிரம், அவமானம், வஞ்சனை போன்ற எதிர்பாராத நிகழ்வுகளை
 > அவ்வப்போது நம் வீட்டிற்கு வந்து செல்லும் விருந்தினர்களாக ஜலாலுதீன் ரூமி உருவகப்படுத்துகிறார்.

4. ஞாலத்தின் மாணப் பெரியது எது?
 > உரிய காலத்தில் ஒருவர், நமக்குச் செய்த உதவி, அளவில் சிறியதாக இருந்தாலும், அது இந்நிலவுலகத்தை விடப் பெரியதாகும்.

5. மறக்கக் கூடாதது, மறக்க வேண்டியது – எவற்றை?
 > ஒருவர் நமக்குச் செய்த உதவியை எப்போதும் மறக்க கூடாது.
 > ஒருவர் நமக்குச் செய்த தீமையை அப்போதே மறத்தல் வேண்டும்.

8. சினத்தை ஏன் காத்தல் வேண்டும்
 > சினத்தினாலேயே தீமைகள் விளைகின்றன.
 > சினம், முகமலர்ச்சியையும், அக மலர்ச்சியையும் கொல்லும்.
 > நம்மை மட்டுமின்றி, நம்மைச் சேர்ந்தோரையும் சினமாகிய நெருப்பு அழித்துவிடும்.
 > எனவே சினத்தைக் காத்தல் வேண்டும்.

9. இடையீடு எவற்றைக் குறியீடாகக் குறிப்பிடுகிறது?
 > கவிதை எழுதும் கவிஞருக்கும் கவிதையை வாசிக்கும் வாசகனுக்கும் இடையே உள்ள சிக்கல்களை இடையீடு என்னும் இக்கவிதை குறியீடாக உணர்த்துகிறது.
 > சொல்ல விரும்பியதெல்லாம் சொல்லில் வருவதில்லை. சொல்லில் வந்தாலும் புரிந்து கொள்வதில் சிக்கல் ஏற்படுகிறது.

10. வசனம் கவிதை வேறுபாடு தருக.
 > சொற்களைத் தேர்ந்து சேர்க்கும்போது எதுகை, மோனை போன்ற தொடை நயங்கள் இன்றியும், 'அடி' அளவை அறிந்திடாமலும் வளர்க்கின்ற வடிவமே வசனமாகும்.
 > எதுகை, மோனை போன்ற தொடை நயங்களுடன் யாப்பிலக்கணத்திற்குள் அடங்கி வரும் சொற்களால் அமைவது கவிதையாகும்.

11. எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும் – யாருக்கு?
 > கலைத்தொழில் வல்ல புலவர்களுக்கு இவ்வுலகின் எத்திசைக்குச் சென்றாலும் அத்திசையில் உணவு, தவறாமல் கிட்டும்.

12. கலிவிழா, ஒலிவிழா –விளக்கம் தருக.
 > திருமயிலையில் கபாலீச்சுரம் என்னும் கோயிலில் நடைபெறும் எழுச்சி மிகு விழா 'கலிவிழா' எனவும்,
 > இளம்பெண்களின் ஆரவாரத்தோடு கொண்டாடும் விழாவினை 'ஒலிவிழா' எனவும் திருஞான சம்பந்தர் குறிப்பிடுகிறார்.

13. 'தருமமிகு சென்னையில் கந்தக் கோட்டத்துள் வளர் தலமோங்கு கந்த வேளே' – தொடருக்குப் பதவுரை எழுதுக.
 > அறம் பல செய்வபர்கள் நிறைந்திருக்கும் சென்னையில், கந்தக்கோட்டம் என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் தலைவனான கந்தனே!

14. பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடில் பரதவர் – தொடரில் உள்ள முரண் நயத்தைக் குறிப்பிடுக.



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

> பரதவர், மீன் பிடிக்கும் கடல் பெரியது.
> ஆனால் அவர்கள் வாழும் இடமோ சிறுகுடி.
'ஒலிவிழா' எனவும் திருஞான சம்பந்தர் குறிப்பிடுகிறார்.

15. எண்வகை மெய்ப்பாடுகள் யாவை?

| | | |
|---|---|---|
| 1 நகை | – | சிரிப்பு |
| 2. அழுகை | – | அழுகை |
| 3. இளிவரல் | – | சிறுமை |
| 4. மருட்கை | – | வியப்பு |
| 5. அச்சம் | – | பயம் |
| 6. பெருமிதம் | – | பெருமை |
| 7. வெகுளி | – | சினம், கோபம் |
| 8. உவகை | – | மகிழ்ச்சி |

16. ஒருமுக எழினி, பொருமுக எழினி – குறிப்பு வரைக.
> ஒரு புறத்திலிருந்து, மறுபுறத்திற்குச் செல்லுமாறு அமைக்கப்படும் திரை 'ஒருமுக எழினி'
> நாடக மேடையின் இருபுறங்களிலிருந்தும் நகர்த்தப்பட்டு, நடுவில் ஒன்றோடு மற்றொன்று பொருந்துமாறு அமைக்கப்படும் திரை, 'பெருமுக எழினி'

17. அறிவுடை வேந்தனின் நெறி குறித்து பிசிராந்தையார் கூறுவன யாவை?
> அறிவுடை வேந்தர், தன் மக்களிடம் வரி திரட்டும் நெறிமுறை அறிந்து, வரியைத் திரட்டினால்
> நாடு பெருஞ்செல்வத்தைப் பெற்று செழிப்படைவதோடு அவன் எண்ணமும் நிறைவேறும், எனப் பிசிராந்தையார் கூறுகிறார்.

18. செவியறிவுறூஉ – துறையை விளக்குக.
> அரசன் தான் செய்ய வேண்டிய கடமைகளில் தவறும் போது,
> கடமைகளை முறை தவறாமல் செய்யுமாறு அவன் கேட்கும் வகையில் அறிவுறுத்துவது 'செவியறிவுறூஉ' என்னும் துறையாகும்.

19. இறை மகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?
> இறைமகன் இயேசுவிற்கு பொல்லாத யூதர்களும், போர் சேவகர் கூட்டமும் துன்பத்தையும், வேதனையையும் கொடுமைகளையும் செய்தனர்.
> இக்கொடுமைகளைக் கண்ட மக்கள், இன்னும் இவ்வுலகம் பிளந்து வெடிக்கவில்லையே வானம் இடிந்து விழவில்லையே, கடல்நீர் வற்றிக் காணாமல் போகவில்லையே இன்னும் இந்த உலகம் அழியாமல் தாமதிப்பதும் ஏனோ? என்றெல்லாம் புலம்பினர்

20. மனத்தை அதன்போக்கில் செல்லவிடக் கூடாது – ஏன்?
> மனதை, தீயவற்றிலிருந்து விலக்கி, நல்வழியில் அனுப்புவதே அறிவுடைமை.
> எனவே மனத்தை அதன் போக்கில் செல்ல விடக்கூடாது.

21. மன உறுதியின் தேவைப்பற்றி திருக்குறள் யாது கூறுகிறது?
> நல்ல செயல்பாட்டிற்கும்,
> எண்ணியதை எண்ணியபடி பெறுவதற்கும், மனஉறுதி தேவை.

22. 'நஞ்சுண்பவர்' என வள்ளுவர் யாரைக் குறிப்பிடுகிறார்?
> கள்ளுண்பவர்களை வள்ளுவர்
> 'எக்காலத்திலும் நஞ்சுண்பவர்' என இழிந்துரைக்கிறார்.

23. பகைவராலும் அழிக்க முடியாத அரண் எது?
> பகைவராலும் அழிக்க முடியாத அரண் என்பது அறிவுடைமையே ஆகும்.

24. அஞ்சத் தகுந்தன, அஞ்சத்தகாதன – எது?
> உறவுபோல் நடித்து உட்பகை கொண்டவரிடம் அச்சம் கொள்ள வேண்டும்.
> வெளிப்படையாக துன்பம் செய்யும் வாள் போன்ற பகைவருக்கு அஞ்சத் தேவையில்லை.

25. உலகில் சிறந்த துணையாகவும், பகையாகவும், வள்ளுவர் யாரைக் குறிப்பிடுகிறார்?
> நல்ல இனத்தை விட உலகில் சிறந்த துணை ஏதும் இல்லை.
> தீய இனத்தை விடத் துன்பம் தரும் பகை வேறு எதுவும் இல்லை.



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**பகுதி - II**
**பிரிவு - 2 (உரைநடைப்பகுதி)**

* **இப்பிரிவில் மூன்று வினாக்கள் (19,20,21) இடம் பெற்றிருக்கும்**
* **எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க வேண்டும்.**
* **ஒவ்வொரு வினாவுக்கும், தலா இரண்டு மதிப்பெண்கள் வழங்கப்படும்**
* **கீழ்கண்ட வினாக்களிலிருந்து இப்பிரிவுக்கான மூன்று வினாக்கள் தேர்ந்தெடுக்கப்படும்.**

1. நடை அழகியல் பற்றி தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.
   > அழகியலை உருவாக்குவதற்குத் தொல்காப்பியம் தளம் அமைத்துத் தருகிறது.
   > எழுத்து, சொல், தொடர், பொருள் என ஓர் உள்ளமைப்பைத் தொல்காப்பியம் கொண்டுள்ளது.
2. தமிழ்ச் சமூகம் மழையை எவ்வாறு கொண்டாடியது?
   > மாமழை போற்றுதும் என்றும்
   > மாரியின்றி காரியமில்லை என்றும்.
   > நீரின்றி அமையாது உலகு என்றும் தமிழ்ச் சமூகம் மழையை கொண்டாடியது.
3. 'இயற்கைப் பேரிடர்கள்' நிகழக் காரணம் என்ன?
   > இயற்கைத் தன் சமநிலையை இழக்கும் போது பருவ நிலைகளில் மாற்றங்கள் ஏற்படுகிறது.
   > அப்போது புயல், பெருமழை, வறட்சி, கடுமையான கோடை உள்ளிட்ட மாறுபட்ட நிகழ்வுகள் நிகழ்கின்றன.
4. பசுமைச் சூழல் வாயுக்கள் யாவை?
   > கார்பன் – டை – ஆக்ஸைடு
   > மீத்தேன்
   > நைட்ரஸ் ஆக்ஸைடு
   > ஓசோன்
   > நீர் வாயுக்கள் போன்றவை பசுமைச் சூழல் வாயுக்கள் ஆகும்.
5. புவி வெப்பமடைதலைத் தடுக்கும் 'மாற்று ஆற்றல்கள்' யாவை?
   > சூரிய ஆற்றல்
   > காற்று ஆற்றல்
   > ஹைட்ரஜன் ஆற்றல்
   > தாவர ஆற்றல்
   > கடலலை ஆற்றல்

   போன்ற கார்பன் அற்ற ஆற்றல்களைப் பயன்படுத்தினால் புவி வெப்பமடைதலைத் தடுக்கலாம்.
6. பெருமழையைத் தாங்கக் கூடிய இயற்கை அமைவுகளைக் கூறுக.
   > குளம்
   > குட்டை
   > ஏரி
   > ஆறு
   > வடிகால்
   > வாய்க்கால்கள்
   > வெள்ளச் சமவெளிகள்

   போன்ற இயற்கை அமைப்புகள் பெருமழையைத் தாங்கக் கூடியவைகளாக இயற்கை அமைத்திருக்கின்றது.
7. புக்கில், தன்மனை – சிறுகுறிப்பு வரைக.
   > தற்காலிகத் தங்குமிடம், அல்லது தற்காலிகப் புகலிடம் 'புக்கில்' எனப்படும்.
   > திருமணத்திற்குப் பிறகு கணவனும், மனைவியும் பெற்றோர்களிடமிருந்து பிரிந்து, தனியாக வாழுமிடம் 'தன்மனை' எனப்படும்.
8. அக்கால கல்வி முறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் எவை?
   > தமிழில் நிகண்டுகள், நன்னூல், காரிகை, தண்டியலங்காரம், நீதி நூல்கள், ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன் முதலியனவும்.
   > கணிதத்தில் கீழ்வாயிலக்கம், மேல்வாயிலக்கம், குழிமாற்று முதலிய பலவகை வாய்பாடுகளும், அக்காலக் கல்வி முறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்களாம்.



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

9. கீழ்திசை சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.

> 'காலின் மெக்கன்சி' என்பரின் தொகுப்புகளை அடிப்படையாகக் கொண்டு 1869 ல் கீழ் திசை சுவடிகள் நூலகம் உருவாக்கப்பட்டது.

> இங்கு கிடைத்தற்கரிய ஓலைச்சுவடிகள், தாள் சுவடிகள், புத்தகங்கள் எனப் பல்வேறு தொகுப்புகள் உள்ளன.

10. பின்னணி இசை படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்? சான்று தருக.

> காட்சியமைப்பில் தோன்றும் உணர்ச்சிகளை கூட்ட, மெருகேற்ற, இசைக்கோப்பும், சில வேளையில் மௌனமும் உதவுகின்றன.

> பாத்திரங்களின் உணர்வுகளை எதிரொளிப்பதும் எடுத்துக் காட்டுவதுமாக பின்னணி இசை அமைகிறது.

11. 'பருவத்தே பயிர் செய்' நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.

> உரிய காலத்தில், அக்காலத்திற்கேற்ற பயிரைத் தேர்ந்தெடுத்து பயிரிட்டு பொறுப்புடன் காத்தல், அவ்விதை முளைத்து முழுப் பலனையும் தரும் என்பது இத்தொடரின் பொருளாகும்.

> காலத்தின் அருமையை உணர்ந்து, எடுத்த காரியத்தில் பொறுப்புடனும் நிருவாக நெறியை இணைத்தும் உழைத்தால் அச்செயல் முழு வெற்றி பெறும்.

12. 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' – நூல் பற்றிக் குறிப்பு வரைக.

> கவின் கலைகள் குறித்து தமிழில் வெளிவந்த முதல் நூல், தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்.

> மயிலை, சீனி. வேங்கடசாமி இந்நூலின் ஆசிரியர்.

> இந்நூல் தமிழக அரசின் முதற்பரிசைப் பெற்றுள்ளது.

13. தமிழர் மேன்மை, ஓங்கிடச் செய்வதொன்றே உயிர் பணியாகக் கொண்டேன் – யார், யாரைப் பற்றி எதற்காகக் கூறுகிறார்.

> பாவேந்தர் பாரதிதாசன், மயிலை. சீனி.வேங்கடசாமி அவர்களைப் பற்றி போற்றி கூறுகிறார்.

> தமிழ் இலக்கியம், கலை, தமிழர் வரலாறு, தமிழ் மொழி, ஆய்வு ஆகியனச் சார்ந்த பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதித் தமிழின் சிறப்பை உலகறியச் செய்தவராதலால், மயிலை சீனி. வேங்கடசாமியை பாவேந்தர் பாரதிதாசன் போற்றுகிறார்.

14. கவிதையின் நடையியல் கூறுகளில் முக்கியமானவை எவை?

> ஒலிக்கோலங்கள்

> சொற்புலம்

> தொடரியல் போக்குகள், இம்மூன்றும் கவிதையின் நடையியல் கூறுகளில் முக்கியமானவை ஆகும்.

15. கவிதை மறுதலைத் தொடர் – குறிப்பு வரைக.

> உரைநடை மற்றும் பேச்சு வழக்கில் தொடரமைப்பு என்பது எழுவாய் + செயப்படுபொருள் + பயனிலை என்று அமைவதே மரபு.

> ஆனால் சங்கப்பாடல்கள் பலவற்றில் இது பிறழ்ந்து வருகிகிறது.

இதையே கவிதை 'மறுதலைத் தொடர்' என்கிறோம்.

16. 'கலை முழுமை' என்றால் என்ன?

> இலக்கியத்தின் 'பயன்' பற்றித் தமிழ் இலக்கிய மரபில் அழுத்தமான கருத்து உண்டு.

> இலக்கியத்தின் நோக்கம் அல்லது அறவியல் சார்ந்த கருத்து நிலைகள் கலை உருவாக்கத்தின் போதே சரிவர இணைந்திருக்க வேண்டும்.

இதுவே 'கலை முழுமை' எனப்படுகிறது.



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

வகுப்பு : 12 **தமிழ்**

**பகுதி III**

**சிறுவினா (செய்யுள்) நான்கு மதிப்பெண் வினாக்கள்**

1. ஏங்கொலி நீர் ஞாலத்து இருளகற்றும் – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

**இடம் :**

* தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல்

**ஆசிரியர் :** தண்டி

**பொருள் :**

* மக்களின் அறியாமையைப் போக்கி அக இருளை விலக்குவதும், ஒப்புவமை இல்லாததுமான தமிழ்.

2. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைப் தேடினார்?
   * கோவலர்கள் தாழ்வான பகுதிகளில் பெருகிய வெள்ளத்தை வெறுத்தனர்.
   * வளைந்த கோலையுடைய ஆயர்கள் எருமை, பசு, ஆடு ஆகிய ஆநிரைகளை மேடான நிலங்களில் மேயவிட்டனர்.
   * குளிரின் மிகுதியால் ஆயர்கள் சூடிய காந்தள் மாலை கசங்கியது.
   * பலருடன் சேர்ந்து கொள்ளி நெருப்பினால் கைகளுக்குச் சூடேற்றிய போதிலும் ஆயர்களது பற்கள் நடுங்கின.
3. சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக
   * கழுகு வேந்தன் சடாயு, இராவணன் சீதையைச் சிறையெடுத்த போது தடுத்துச் சண்டையிட்டுக் காயப்பட்டான்.
   * இராமனிடம் நடந்ததைக் கூறிவிட்டு இறந்துவிடுகிறான்
   * இராமன் சடாயுவைத் தன் தந்தையாக ஏற்று இறுதிச் சடங்குகளைச் செய்தான்.
   * அகில் கட்டைகளையும், சந்தனக் கட்டைகளையும் இராமன் கொண்டு வந்து வைத்தான்.
   * தேவையான அளவு தருப்பைப்புற்களை கொண்டு வந்தான். பூக்களைத் தூவினான்.
   * மணலினால் திருத்தமாக மேடை அமைத்து, நன்னீரையும் எடுத்து வந்தான் இராமன்.
4. வருபவர் எவராயினும் நன்றி செலுத்து – இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

இடம் : ஜலாலுதீன்ரூமியின் கவிதைகளில் தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழில் ‘தாகங்கொண்ட மீனொன்று’ – என்ற தலைப்பில் இக்கவிதை வரிகள் இடம் பெற்றுள்ளது.

பொருள் : வக்கிரம், அவமானம், வஞ்சனை, இவைகளை இன்முகத்துடன் வரவேற்று நன்றி செலுத்த வேண்டும்.

5. சினத்தால் வரும் கேட்டினைக் கூறுக.
   * முகமலர்ச்சியையும் அகமகிழ்ச்சியையும் கொல்லுகின்ற சினத்தைவிட நமக்கு வேறு பகை இல்லை.
   * ஒருவன் தன்னைத் தான் காத்துக்கொள்ள விரும்பினால் சினத்தைக் காக்க வேண்டும். அவ்வாறு காக்காவிட்டால் அச்சினமே அவனை அழித்துவிடும்.
   * சினம், தன்னைச் சேர்ந்தவரையும் அழிக்கும் நெருப்பு
   * சினம் ஒருவரது சுற்றம் என்னும் பாதுகாப்புப் தெப்பத்தையும் அழித்து விடும்.
6. ‘மூன்றான காலம் போல் ஒன்று’ எவை? ஏன்? விளக்குக.
   * எண்ணம், வெளியீடு, கேட்டல் இவை மூன்றும் ஒன்றல்ல, ஒன்றென்றால் மூன்றான காலம் போல் ஒன்று.
   * சொல்ல விரும்பியது எல்லாம் சொல்லில் வெளிப்படுவதில்லை.
   * சொல்ல வந்ததைச் சொன்னாலும் கேட்பதில் சிக்கல் ஏற்படுகிறது.
   * எண்ணுதல், வெளியிடுதல், உற்றுக்கேட்டல் ஆகிய இம்மூன்றும் எப்போதும் ஒன்றாக இருப்பதில்லை.
7. இராமலிங்க அடிகள் கந்த வேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?
   * ஒரு நெறிபட்ட மனத்துடன் இறைவனது மலர்போன்ற திருவடிகைள நினைக்கின்ற உத்தமர்களின் உறவு தனக்கு வேண்டும்.
   * தம் உள்ளத்தில் ஒன்றை நினைத்துக்கொண்டு புறத்தில் வேறொன்றாகப் பேசும் வஞ்சகர்களின் உறவு தனக்கு ஏற்படாமல் காக்க வேண்டும்.
   * பொய் பேசாதிருக்க வேண்டும்.
   * மதமான பேய் என்னை அணுகாதிருக்க வேண்டும்.



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

8. அறிவின் மேன்மை பற்றித் திருக்குறள் வழி நீவிர் கருதுவன யாவை?
   * அறிவு, அழிவு வராமல் காக்கும் கருவியாகும். பகைவரால் அழிக்க முடியாத பாதுகாப்பு அரணாக அமையும்.
   * மனத்தை அது போகும் போக்கில் செல்லவிடாமல், நல்ல வழியில் செலுத்துவதே அறிவாகும்.
   * எப்பொருளை யார் சொல்லக் கேட்டாலும் உண்மைப் பொருளை ஆராய்ந்து அறியும்.
   * உலகம் செல்லும் உயர்ந்த நெறியிலே தானும் இணைந்து செல்லும்.

9. யானை புக்க புலம்போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே – உவமையும் பொருளையும் பொருத்தி விளக்குக.

**உவமை :**

'யானை புக்க புலம் போலத்'
   * யானைத் தான் புகுந்த நிலத்தில் தானும் உண்ணாமல் பிறருக்கும் பயன்படாமல் மிதித்து வீணாக்கி விடும்.

**பொருள் :** குடிமக்களின் அன்பு கெடுமாறு நாள்தோறும் வரி திரட்டுவது.

**பொருளோடு பொருத்துதல் :**

மக்களிடமிருந்து வரி திரட்டும் முறையறியாமல் நாள்தோறும் வரி திரட்டும் அறிவில் குறைந்த அரசன் பயனடையமாட்டான். நாட்டு மக்களையும் துன்புறுத்துவான்.

10. கடையெழு வள்ளல்களையும் அவர்கள் செய்த செயலையும் அட்டவணைப்படுத்துக.
   * பேகன் : மயிலுக்குப் போர்வை தந்தவன்
   * பாரி : முல்லைக்கு தேர் தந்தவன்
   * காரி : குதிரைகளையும் ஏனைய செல்வங்களையும் ஈந்தவன்
   * ஆய் : நீல வண்ணக் கல்லையும் நாகம் கொடுத்த ஆடையினையும் இறைவனுக்கு கொடுத்தவன்
   * அதியன் : ஔவைக்கு நெல்லிக்கனியை ஈந்தவன்
   * நள்ளி : மழைபோன்று அனைத்தையும் வாரி வழங்குபவன்
   * ஓரி : சிறிய மலை நாட்டைக் கூத்தர்க்குப் பரிசாக வழங்கியவன்
   * மதமான பேய் என்னை அணுகாதிருக்க வேண்டும்.

## சிறுவினா (உரைநடை)

1. சங்கப்பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க பண்பாகும். விளக்குக.
   * இசையோடும் ஓசையோடும் தான் மொழி சார்ந்த கவிதை பிரிக்கிறது.
   * ஓசையும், பொருளும் இணைந்து கலைவடிவம் கொள்வதை 'ஒலிப்பின்னல்' என்கிறோம்.
   * 'கடந்தடு தானை மூவிருங்கூடி
     உடன்றனிர் ஆயினும் புறம்பு கொளற்கரிதே' (புறம்)
   * இப்பாடலில் வன்மையான உணர்ச்சியைக் காட்டுகிற விதத்தில் க,த,ப,ற முதலிய வல்லின மெய்கள் அதிகமாக வருவதைக் காணலாம்.

2. பேரிடர் மேலாண்மை ஆணையம் – விளக்குக.
   * நடுவண் அரசு 2005 ஆம் ஆண்டு டிசம்பர் 23–அன்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது.
   * புயல், வெள்ளம், நிலநடுக்கம், வறட்சி, சுனாமி, நிலச்சரிவு, தீ விபத்து, சூறாவளி, பனிப்புயல், வேதி விபத்துகள் முதலான பேரிடர் காலத்தில் பல்வேறு அமைப்புகளை ஒருங்கிணைத்துச் செயலாற்ற உதவுகிறது.
   * மாநிலம், மாவட்டம், ஊராட்சி, சிற்றூராட்சி என அனைத்து நிலைகளிலும் குழுக்கள் அமைத்து பேரிடர் காலங்களில் செயலாற்ற பேரிடர் மேலாண்மை ஆணையம் வழிவகை செய்கிறது.

3. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் – விளக்குக.
   * சங்க காலத்தில், தனிக்குடும்ப அமைப்பு விரிவு பெற்று கணவன், மனைவி, மகன் ஆகியோருடன் தந்தை சேர்ந்து வாழும் விரிந்த குடும்ப முறை காணப்பட்டது.
   * சங்க கால அமைப்பில் முதல்நிலை உறவினர்களை இனம் காண முடிகிறது.
   * நற்றாய், செவிலித்தாய், செவிலியின் மகளாகிய தோழி போன்றோர் குடும்ப அமைப்பில் முதன்மைப் பங்கு பெறுகின்றனர்.
   * அறத்தினை விரும்பிய சுற்றத்தோடு சேர்ந்து தலைவனும், தலைவியும், மனையறம் காத்தலே இவ்வாழ்வின் பயன் என்று சங்க கால மக்கள் எண்ணினர்

4. மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.
   * பிள்ளைகள் முதலில் மணலில் எழுதிப் பழகுவார்கள். அதனால் எழுத்துகள் வரிசையாகவும் நன்றாகவும் அமையும்.
   * பாத்தியாயர் முதலில் தரையில் எழுத அதன்மேல் பிள்ளைகள் எழுதச்சொல்லி விளம்புவார்கள். பிறகு பிள்ளைகள் தாமே எழுதி எழுதிப் பழகுவார்கள்.
   * எழுத்துகள் ஒன்றோடொன்று படாமல் வரிகோணாமல் பழைய காலத்தில் எழுதி வந்தார்கள்.



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

* எழுத்துகளின் உருங்கள் பல காலமாக மாறாமல் இருந்து வந்தன.
* புள்ளி, கால், கொம்பு, விலங்கு, முதலியவை வரியெழுத்தின் உறுப்புகளைக் கொண்டு இன்றளவும் எழுதும் வழக்கம் பின்பற்றப்படுகிறது.

5. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.
   * தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
   * கோட்டை அருங்காட்சியம்
   * தென்னகத் தொடர்வண்டி நிலையம்
   * பொது அஞ்சல் அலுவலகம்
   * கன்னிமாரா நூலகம்
   * ரிப்பன் கட்டிடம்
   * உயர்நீதி மன்றம்
   * இதுபோன்ற பல கட்டடங்கள் இந்திய சாரசனிக் கட்டடக்கலையை பறைசாற்றுகின்றன.
6. திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுகளுன் புலப்படுத்துக.
   * திரைப்படத்தில் காட்சிகள் சிறப்பாக அமைவதே கதை நகர்வுக்கு உதவும்.
   * திரைப்படத்தில் வசனம் இன்றிக் காட்சிகளை அடுத்தடுத்து வைப்பதன் மூலம் கதை சொல்வர்.

   **சான்று**
   * முதல் காட்சியில் தோழி ஒருத்தி கதாநாயகியிடம் தொடர்வண்டிப் பயணச் சீட்டினைக் கொடுப்பாள்.
   * அடுத்தக்காட்சியில் கதாநாயகி தொடர்வண்டியில் இருப்பாள்.
   * எண் 7, வீரையா தெரு என்ற முகவரியைச் சொல்லும் முன்னே அந்த முகவரியில் சென்று காட்சி நிற்கும்.
7. தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை? (மாணவர்கள் சொந்த நடையில் எழுதவும்)
8. நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிவுப்படுத்துவீர்கள்? (மாணவர்கள் சொந்த நடையில் எழுதவும்)

**39.அணிகளைச் சான்றுடன் விளக்குக.**

**1. நிரல்நிறை அணி**

**அணி இலக்கணம்**

சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி அவ்வரிசைப்படியே பொருள் கொள்வது.

**சான்று:**

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

**அணி பொருத்தம்:**

இக்குறட்பாவில் முதலில் அடியில் அன்பு, அறன் இரண்டாம் அடியில் பண்பு, பயன் இணையாக நின்று வரிசையாக நிரல்பட அமைத்து பொருள் கொள்வது நிரல்நிறை அணி.

**2. சொற்பொருள் பின்வரும் நிலையணி**

**அணி இலக்கணம்**

வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவது.

**சான்று:**

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

**அணி பொருத்தம்:**

"பொருள்" என்ற ஒரே சொல் மீண்டும் மீண்டும் வந்து "பொருண்மை" என்ற ஒரே பொருளை தருவது சொற்பொருள் பின்வரும் நிலையணியாகும்.

**3. ஏகதேச உருவக அணி**

**அணி இலக்கணம்**

தொடர்புடைய இரு பொருள்களுள் ஒன்றை உருவகப்படுத்தி, மற்றொன்றை உருவகப்படுத்தாமல் விடுவது.

**சான்று:**

சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

**அணி பொருத்தம்:**

இங்கு சுற்றத்தை தெப்பமாக உருவகப்படுத்தி, சினத்தை உருவகப்படுத்தாமல் விட்டுள்ளதால் ஏகதேச உருவக அணி



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

4. பொருள் வேற்றுமையணி

அணி இலக்கணம்

இருவேறு பொருள்களுக்கிடையே ஒற்றுமையை முதலில் கூறியப்பின் அதில் ஒன்றை மட்டும் வேறுபடுத்திக் காட்டுவது பொருள் வேற்றுமை அணி ஆகும்.

சான்று:

ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளாங்கி
ஏங்கொலி நீர் ஞாலத்து இருளகற்றும் – ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது
தன்னேர் இலாத தமிழ்.

அணி பொருத்தம்:

இப்பாடலில் மக்களால் போற்றப்படும், மலையில் தோன்றுவது. இருளை அகற்றுவது போன்ற பண்புகளுள் கதிரவனுக்கும் தமிழுக்கும் ஒற்றுமைக் கூறி அவற்றுள் தமிழ் தன்னேர் இலாதது என்னும் தன்மையை வேறுபடுத்திக் காட்டுவதால் பொருள் வேற்றுமை அணி ஆயிற்று. வேற்றுமை அணிக்கு "தீயினால் சுட்டபுண்" குறளைச் சான்றாக எழுதியிருப்பினும் மதிப்பெண் வழங்குக.

40.இலக்கிய நயம் பாராட்டுக.

(மையக்கருத்துடன் எவையேனும் மூன்று நயங்கள் மட்டும்)

1. வெட்டியடிக்குது மின்னல் – கடல்
வீரத் திரை கொண்டு விண்ணையிடிக்குது
கொட்டியிடிக்குது மேகம் – கூ
கூவென்று விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா – என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத் திசையும் இடிய – மழை
எங்ஙனம் வந்ததடா தம்பிவீரா
– *பாரதியார்*

மையக்கருத்து:

மின்னல், பெருங்காற்று, கடலலை, மேகம் தாள முழுக்கத்தோடு எட்டு திசையும் இடித்து விடுவது போல கனத்த மழையின் சிறப்புகளைக் கூறுவதே இப்பாடலின் மையக்கருவாகும்.

மோனை :

"முதலெழுத்து ஒன்றி வருவது"

| | | |
|---|---|---|
| வெட்டி | கொட்டி | எட்டுத்திசை |
| வீரத் | கூவென்று | எங்ஙனம் |

எதுகை:

சிந்து வகை

சந்தம் :

இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது

| | |
|---|---|
| வெட்டி | கொட்டி |
| சுட்ட | எட்டு |

சுவை:

மழையின் சிறப்பினைக் கூறுவதால் பெருமிச்சுவை பயின்று வந்துள்ளது.

அணி:

இயல்பு நவிற்சி அணி

தலைப்பு:

மழையின் சிறப்பு

2. பாலைவனம் சோலைவன மாக வேண்டும்;
பசுங்கிளிகள் அங்கிருந்து பாடவேண்டும்;
சாலைகளில் பல தொழிலும் பெருக வேண்டும்;
சபைகளிலே தமிழெழுத்து முழங்க வேண்டும்;
சீலை உடை கதருடையாய்த் திகழ வேண்டும்;
தேசபக்தி செழித்தோங்கி வளர வேண்டும்;
வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிய வேண்டும்;
வெற்றியின் மேல் வெற்றி எமக் கெய்த வேண்டும்.
– *கவிமணி*

மையக்கருத்து:

நம்நாடு சோலைவனமாக மாற மக்களிடம் தேசப்பற்று, மொழிப்பற்று, கதர் உடை பற்றும் இருந்தால் வெற்றி கிட்டும் என்று கூறுவதே இப்பாடலின் மையக் கருவாகும்.

மோனை :

"முதலெழுத்து ஒன்றி வருவது"

| | | |
|---|---|---|
| பாலைவனம் | சாலைகளில் | வேலையில்லாத் |
| பசுங்கிளிகள் | சபைகளிலே | வெற்றியின் |



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**எதுகை: "இரண்டாம் எழுத்து"**

பாலைவனம் சீலைஉடை

சாலைகளில் வேலையில்லாத்

**இயைபு:**

"ஈற்றுச்சீர் ஒன்றி வருவது"

வேண்டும்

வேண்டும்

வேண்டும்

வேண்டும்

**முரண்**

"எதிர்ச்சொல் பெற்று வருவது"

பாலைவனம் X சோலைவனம்

**அணி நயம்:**

"வேண்டும்" என்ற சொல் பலமுறை வந்து அதே பொருளைத் தருவதால் சொற்பொருள் பின்வருநிலையணி பயின்றுள்ளது.

**சந்த நயம்:**

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

**சுவை நயம்:**

உவகைச் சுவை பயின்றுள்ளது.

**தலைப்பு:**

"வெற்றி வேண்டும்"

**41 கவிதை புனைக**

1. நிலா
2. அன்னை
3. இயற்கை
4. கடல்
5. கல்வி

**1. நிலா**

அந்தி வானம் சிவக்கையிலே!
ஆதவனது கரத்தால் ஒளிர்கிறாய்!
தூரத்தே நின்று புன்னகைக்கின்றாய்
துன்பத்தையும் இன்பத்தையும் உணர்த்த
அவ்வப்போது கரைகிறாய்; வளர்கிறாய்
அன்னம் உண்ண சாட்சியாகிறாய்
கட்டணம் வாங்காமல் வெளிச்சம் தருகிறாய்
காலையில் ஒளித்து இரவில் வருகிறாய்
இரவெனும் கவிதையின் நாயகி நீதானே!

**2. அன்னை**

அன்னை என்ற அழகு தெய்வம்
ஆசான் போல் அறிவு புகட்டி
இசை என்னும் இன்பச் சூழலில்
ஈதல் என்னும் பண்பை ஊட்டி
உண்மையை அறியச் செய்து
விளக்கம் என்னும் பால்புகட்டி
எங்கள் வெற்றிக்கு வழிகாட்டி
ஏணி போல் ஏற்றிவிட்டு
பேய்கள் எல்லா தெளிவு பெற்று
ஒவ்வொரு வெற்றிக்கும் துணை நின்று
ஓடம் போல் கரையேற்றி
ஔடதமாய் பிணி நீக்கி
ஆனந்த வாழ்வு தரும்
அன்னையின் தாயன்பு.



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**3. இயற்கை**

பச்சைப்பசேல் காட்சியில்
நிலம் அழகு
நீலநிற வண்ணக் கடல்
அலை அழகு
இளஞ்சிவப்பு நிற ஒளிக்கற்றை
நெருப்பு அழகு
நிறமற்ற காற்றில் உயிர்வாழும்
உயிர்காற்று அழகு
உலகையே ஒரு குடைக்குள் அடக்கும்
ஆகாயம் அழகு
இத்தனையும் பெற்றெடுத்த இயற்கை
அன்னை அழகு
உன்னைப் போற்றி பாதுகாப்பதே
எங்களுக்கு அழகு

**4. கடல்:**

அலைகடலின் காட்சி கவின்மிகு காட்சி!
உலகின் பகுதியில் பெரும்பங்கு மாட்சி!
விளையில்லா அழகை அலையில் காண
வித்தகர் பலர் விரும்பி ஓடுகின்றாய்
உடலை நனைத்து உவகை அடைகின்றாய்!
படகில் பயணித்து பரவசம் காண்கின்றார்
கண்ணுக்கெட்டிய தூரம் வரை விரித்து
விண்ணுக்கும் கூட விந்தை காட்டுவது கடல்!

**5. கல்வி:**

கல்வி என்ற கடலில் மூழ்கி
சிப்பிக்குள் முத்து எடுக்க
கல்விக் கலை கூடத்தில்
நன்னெறி புகட்டுவது கல்வி
வாழ்க்கை என்ற படகில்
பயணம் சிறக்கக் கல்வி
பண்பாடு ஓங்கக் கல்வி
பாடசாலை செல்வோம்
கல்வி செல்வம் பெறுவோம்.

**42.தமிழாக்கம் தருக.**

1. Learning is a treasure that will follow its owner every where.
   கல்வி என்பது அதன் உரிமையாளரை அவர் செல்லும் இடங்களுக்கெல்லாம் அவரைப் பின்தொடர்ந்து வரும் ஒரு செல்வம்.
2. A Language is a new life.
   புதிய மொழி; புதிய வாழ்க்கை
3. If you want people to understand you. Speak their language.
   உன்னை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்பினால் நீ அவர்களுடைய மொழியில் பேச வேண்டும்.
4. Knowledge of Language is the doorway to wisdom.
   மொழிகளைப் பற்றிய அறிவு நம் ஞானத்திற்கு கதவு
5. The limits of my language are the limits of my world.
   எனது மொழியின் எல்லையே என் உலகின் எல்லை
6. Knowledge is power.
   அறிவே ஆற்றல்
7. Prevention is better than cure.
   வருமுன் காப்பதே சிறந்தது.
8. All that glitters is not gold
   மின்னுவதெல்லாம் பொன் அல்ல.
9. No pain, No gain
   உழைப்பின்றி ஊதியமில்லை.
10. Money makes many things.
    பணம் பத்தும் செய்யும்.
11. A friend indeed is a friend inneed.
    இடுக்கண் களைபவனே உற்ற நண்பன்.



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

12.The Pen is mighter than sword.

பேனா வாளை விட வலிமையானது.

13.A good begining makes a good ending.

நல்ல தொடக்கம் நல்ல முடிவு.

14.An empty sack cannot stand upright.

வெறும் கை முழம்போடாது.

15 Blood is thicker than water

தானாடாவிட்டாலும் தன் தசை ஆடும்

16 After a strom comes a calm

புயலுக்குப் பின் அமைதி.

17.As is the mother, so is the daughter.

தாயைப்போல பிள்ளை, நூலைப்போலச் சேலை

18.Barking dog seldm bite.

குரைக்கின்ற நாய் கடிக்காது.

19.Best to band while it is a twing

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது.

20.Covet all, loss all

பேராசை பெரு நஷ்டம்.

21. Content is happiness

போதும் எனும் மனமே பொன் செய்யும் மருந்து.

22.Evil begets evil

கெடுவான் கேடு நினைப்பான்

23. Familiarity breeds contempt.

பழகப்பழகப் பாலும் புளிக்கும்.

24. Hurry makes one worry.

பதறியக் காரியம் சிதறிப் போகும்.

25. Look before you leap.

ஆழம் தெரியாமல் காலை விடாதே.

**43.பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு தொடர்புப்படுத்தி எழுதுக.**

**1. சிறுதுரும்பும் பல்குத்த உதவும்.**

எந்தவொரு சின்ன செயலுமே பயனுள்ளதாக அமையும் என்பதை உணர வேண்டும்.

**வாழ்க்கை நிகழ்வு :**

நான் பள்ளியில் படிக்கும்போது என்னுடன் கந்தன் என்ற மாணவனும் படித்து வந்தான். ஓரளவு படிக்கும் மாணவன், ஆனாலும் தினந்தோறும் பள்ளிக்கு வந்து போகும் போது மாணவர்கள் பயன்படுத்தி வீணாக்கிய காகிதங்களைப் பொறிக்கிச் செல்வான்.

'ஏண்டா இந்த குப்பை காகிதங்களைப் பொறுக்கிற' என்று நான் அவனிடம் கேட்பதுண்டு. ஆனால் கந்தன் சிரித்துக் கொண்டே அந்த காகிதத் துண்டுகளை தனது கூடைக்குள் அள்ளிச் செல்வான். நான் கூட இவன் இந்த காகிதத் துண்டுகளை கடையில் போட்டு பணம் சம்பாதிக்கிறானோ என்று எனக்குள்ளே கேட்டதுண்டு. நான் எண்ணியது போல ஏதும் நடக்கவும் இல்லை. கந்தனின் இந்த செயல் எங்களது நட்பையே பிரித்து விட்டது.

ஒரு நாள் பள்ளியில் தலைமையாசிரியரிடம் நமது பள்ளியில் ஓர் கண்காட்சி வைக்கப்போகிறேன். கழிவு பொருட்களிலிருந்து படைக்கும் பொருளின் கண்காட்சி இது என்றார். ஒவ்வொரு மாணவர்களும் வீணான பொருட்களைத் தேடி அலைந்து சேர்த்தனர். கண்காட்சி தொடங்கியது. கந்தன் பேப்பர்களின் கூழினால் செய்த மனிதச் சிலையை கண்காட்சியில் வைத்தான். அந்த சிலை அனைவரையுமே கவர்ந்தது. நான் கந்தனின் செயலைக் கண்டு பெருமிதம் கொண்டேன்.

**நீதி:**

ஆம் கழிவுப்பொருட்கள் என்று எதையுமே வீணாக்கக் கூடாது. அதுவும் சில நேரத்தில் பயனுள்ள பொருளாக மாறும் என்பது போல, முருகன் சிறு துரும்பும் பல்குத்த உதவும் என்பதனை நிருபித்து விட்டான்.



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

2. கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

**பழமொழி விளக்கம்:**

தனி ஒருவரால் சாதிக்க முடியாத பல காரியங்களைக் கூட்டு முயற்சியினால் வெற்றி பெறச்செய்ய முடியும் என்று இப்பழமொழி உணர்த்துகிறது.

**வாழ்க்கை நிகழ்வு:**

ஒரு ஊரில் பல சமயத்தார்கள் ஒன்று கூடி வாழ்ந்து வந்தார்கள். அந்த ஊரில் நல்லது கெட்டது எது நடந்தாலும் ஒற்றுமையுடன் செயல்படுவார்கள். இப்படி பல நாட்கள் கழிந்து விட்டன. பிறகு ஒருவருக்கொருவர் சில காரணத்துக்காக வாய்ச்சண்டையாகி, கைச்சண்டையாகி, கடைசியில் உயிரைப் பறிக்கக் கூடிய சண்டையாக மாறிவிட்டது. இந்தச் செயலைப் பார்த்து பக்கத்து ஊர்க்காரர்களும் இவர்களைத் தாழ்வாக நினைத்தார்கள். இறுதியில் ஒருவருக்கொருவர் பிரச்சனையில் மாட்டிக்கொண்டு காவல் நிலையம், நீதிமன்றம் என்று போய், தன்னிடம் இருக்கும் பணத்தை எல்லாம் விரயம் செய்து கடைசியில் தன் குடும்பத்தைச் சோகத்திற்குத் தள்ளி விட்டார்கள்.

பிறகு ஒவ்வொரு சமயத்தாருக்கும் தன் நிலையைத் தெரிந்து கொண்டு, நாம் ஒற்றுமையுடன் இருந்தால் தான் வாழ்க்கையில் செம்மையை அடைவோம் என்று சொல்லி ஒற்றுமையுடன் வாழ்ந்தார்கள்.

**நீதி:**

சிறுதொகை தான் என்றாலும் ஆபத்துக்கு உதவும்போது மிகப்பெரிய பயனாகும். "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்ற பழமொழிக்கேற்ப தேரை இழுப்பதற்கு பல மனிதர்கள் தேவை. அதுபோல ஒருவர் மட்டும் தேரை இழுக்க முடியாது என்பதை போல கூடி வாழ்ந்தால் கோடி நன்மையாகும் என்பதை இப்பழமொழி உணர்த்துகிறது.

3. முயற்சி திருவினையாக்கும்.

**பழமொழி விளக்கம்:**

முயற்சியை கைவிடாமல் தொடர்ந்து செய்தால் உயர்வு கிட்டும்.

**வாழ்க்கை நிகழ்வு:**

சங்கீதா ஒன்பதாம் வகுப்பு படிக்கும் மாணவி. சங்கீதா தமிழ் வாசித்தாலும், ஆங்கிலம் வாசித்தாலும் தவறாக அவள் வாசிப்பதைக் கேட்டு வகுப்பே சிரிக்கும். ஆனால் அதற்காக அவள் வெட்கப்படவில்லை. கண்ணாடி முன்பும் உரக்க வாசித்து பழகினாள். அப்போது பொங்கல் விழாவினைக் குறித்து பேச்சிப் போட்டிக் சங்கீதா தன் பெயரை கொடுத்து இருந்தாள். அவளைப் பார்த்து அனைவரும் ஏளனம் செய்தனர். இவளா பேசப் போகிறான் என்று அவள் மனதை புண்படுத்தினர். ஆனால் அவள் தன் அப்பா, அம்மா, தங்கை முன்னிலையில் வீட்டில் பேசினாள். நடந்த பேச்சுப் போட்டியில் சிறப்பாகப் பேசி முதல் பரிசைத் தட்டிச் சென்றாள். முயற்சி செய்தால் முடியாத காரியம் ஒன்றும் இல்லை.

**நீதி :**

"சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்" என்பதை உணர்ந்து விடாமுயற்சி செய்தால் தன் வாழ்வில் வெற்றி பெறலாம் என்பது பழமொழி உணர்த்தும் நீதிக் கருத்தாகும்.



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

## எஸ். என். எம் பதின்ம மேல்நிலைப்பள்ளி - சிவகாசி.

**முக்கிய மற்றும் உட்பகுதி வினாக்கள்**

**பன்னிரண்டாம் வகுப்பு**



மு .சங்கர்
முதுகலைத் தமிழாசிரியர்
9626580093

### இயல்:1

| குறுவினா: | சிறுவினா | நெடுவினா |
|---|---|---|
| 1, 2, 3, 4 | 2,3 | 2, 3, 4 |

**உட்பகுதி வினாக்கள்( சிறுவினா) (குறுவினா)**

1. எழுத்துப் பிழைதவிர்க்க சில குறிப்புகள் தருக (சி.வி)
2. லகர ளகர வழிகள் இரண்டினை எழுதுக. (கு.வி)
3. வம்சமணி தீபிகை – பதிப்பு பற்றி எழுதுக. (சி.வி) பக் – 13
4. பரலி சு. நெல்லையப்பர் - சிறு குறிப்பு வரைக (சி.வி)
5. பரலி சு. நெல்லையப்பர் துணையாசிரியராய் பணியாற்றிய இதழ்கள் (கு.வி)
6. ஆங்கவற்றுள், தனியாழி – புணர்ச்சிவிதி (கு.வி)
7. அணியிலக்கணம் மட்டும் கூறும் நூல்கள் (கு.வி)
8. தண்டியலங்காரம் - சிறுகுறிப்பு வரைக (சி.வி)
9. தி.சு. நாடராசன் எழுதிய நூல்கள் யாவை? (கு.வி)
10. சொல்வளம் என்றால் என்ன? (கு.வி) பக் - 6
11. சிற்பியின் கவிதை நூல்கள் யாவை? (கு.வி)
12. சிற்பியின் உரைநடை நூல்கள் யாவை? (கு.வி)

### இயல்:2

| குறுவினா: | சிறுவினா | நெடுவினா |
|---|---|---|
| 1, 2, 4 | 2, 3, 4 | 1, 2* |

**உட்பகுதி வினாக்கள்( சிறுவினா) (குறுவினா)**

1. புயலுக்கு பெயர் வைத்த நாடுகள் எவை? எவை? (கு.வி)
2. மழையைக் கணிக்கும் அறிகுறிகள் யாவை? (கு.வி)
3. கூதிர்காசறை – விளக்குக. (கு.வி)
4. வாகைத்திணை – விளக்குக. (கு.வி)
5. நெடுநல்வாடை – குறிப்பு வரைக. (சி.வி)
6. மொழியின் அடிப்படைப் பண்புகள் யாவை? (சி.வி)
7. இடப்பாகுபாடு குறித்து எழுதுக. (சி.வி) பக் - 40

### இயல்:3

| குறுவினா: | சிறுவினா | நெடுவினா |
|---|---|---|
| 1, 2, 5 | 2, 3*, 5 | 2, 3 |

**உட்பகுதி வினாக்கள்( சிறுவினா) (குறுவினா)**

1. மனை எனும் சொல் சங்க இலக்கியங்களில் பயின்றுவரும் வழவத்தை எழுதுக. (சி.வி) - 49
2. தந்தை வழிக்குடும்பம் பற்றி எழுதுக. (சி.வி)
3. தாய் வழிக்குடும்பம் பற்றி எழுதுக. (சி.வி)
4. பக்தவச்சல பாரதி– சிறு குறிப்பு வரைக. (சி.வி) – 51
5. பக்தவச்சல பாரதி எழுதிய நூல்கள் (கு.வி)
6. ஜலாலுத்தீன் ரூமி – குறிப்பு வரைக (சி.வி)
7. கிட்கிந்தா காண்டத்தில் - நட்பு கோட்படலம் குறித்து எழுதுக. (சி.வி)
8. நம் பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள கம்பராமாயணக் காண்டங்கள் மற்றம் அவற்றின் இடம் பெறும் பாத்திரங்களின் பெயர்கள் யாவை? (கு.வி)
9. பொலிந்தாள் - உறுப்பிலக்கணம் தருக. (கு.வி)

மு.சங்கர் முதுகலைத் தமிழாசிரியர்

10. வினைத் தொகைச் சொல்லுக்கிடையில் வல்லினம் மிகக் கூடாது - இரு சான்று தருக. (கு.வி ) பக் - 66

## இயல்:4

| குறுவினா: | சிறுவினா | நெடுவினா |
|---|---|---|
| 1, 2, 3,4 | 1,2, 4 | 1, 2 |

**உட்பகுதி வினாக்கள்( சிறுவினா) (குறுவினா)**

1. அகூராப்பியாசம், சீதாளபத்திரம் - பொருள் தருக. (கு.வி)
2. மையாடல் என்றால் என்ன? (சி.வி) பக் - 82
3. ஓதற்பிரிவு குறித்து எழுதுக. (சி.வி) பக் - 84
4. உ.வே.சா பெற்ற பட்டங்கள் . (கு.வி)
5. கவிஞர் சுரதா எழுதிய நூல்கள் (சி.வி)
6. கவிஞர் சுரதா பெற்ற விருதுகள் (சி.வி)
7. வேறு, வேறு என சுரதா குறிப்பிடுவன யாவை? (சி.வி) பக் - 86
8. கவிஞர் சி.மணியின் புனைப் பெயர்கள் (கு.வி) பக் - 88
9. கவிஞர் சி.மணியின் பெற்ற விருதுகள் (கு.வி) பக் - 88
10. ஔவையார் - குறிப்பு வரைக. (கு.வி )
11. ஔவையார் பாடல் பாடிய நூல்கள் / பாடல் எண்ணிக்கை (கு.வி)
12. இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளைக்கான அசைகளை எழுதுக. (கு.வி)
13. வெண்பா அடிவரையறை – பற்றி எழுதுக. (சி.வி) பக் - 97
14. வெண்பாவின் இலக்கணம் வரைக (கு.வி) பக; - 77
15. நேரிசை வெண்பா – சான்று தந்து விளக்குக. (சி.வி)
16. இன்னிசை வெண்பா – சான்று தந்து விளக்குக. (சி.வி)

## இயல்:5

| குறுவினா: | சிறுவினா | நெடுவினா |
|---|---|---|
| 1, 2, 3,4 | 2, 4 | 2 |

**உட்பகுதி வினாக்கள்( சிறுவினா) (குறுவினா)**

1. நகரம் - உருவாக்கம் குறித்து எழுதுக. (சி.வி)
2. இந்தோ – சாரசனிக் கட்டடக்கலை (சி.வி)
3. கன்னிமாரா நூலகம் -குறிப்பு வரைக (சி.வி) பக் - 110
4. அண்ணா நூற்றாண்டு நூலகம் . (கு.வி) பக் - 110
5. கீழ்த்திசை சுவடிகள் நூல்கள் (கு.வி) பக் - 110
6. இராமலிங்க வள்ளலார் - குறிப்பு வரைக. (சி.வி) பக் - 110
7. மயிலைப் பதிகத்தில் காணப்படும் விழாக்கள் (கு.வி) பக் - 114
8. மயிலாப்பூரின் சிறப்புகள் யாவை? *(சி.வி)
9. அகநானூற்றின் மூன்று பிரிகள் யாவை? (கு.வி)
10. வினைப்படிமம் - சன்றுடன் விளக்குக. (சி.வி )
11. பயன் படிமம் - சான்றுடன் விளக்குக (சி.வி)
12. மெய்ப்பழமம் - சான்றுடன் விளக்குக (சி.வி)
13. உருப்படிமம் - சான்றுடன் விளக்குக (சி.வி)

## இயல்:6

| குறுவினா: | சிறுவினா | நெடுவினா |
|---|---|---|
| 1, 2, 3,4 | 1, 2, 3 | 2 |

**உட்பகுதி வினாக்கள்( சிறுவினா) (குறுவினா)**

1. ஒற்றைக் கோணக்கலை என்பது யாது?.அதனை விளக்குக (கு.வி) பக் - 131
2. சேய்மைக் காட்சிதுணிப்பு? (கு.வி)
3. நடுக் காட்சித் துணிப்பு? (கு.வி)
4. அண்மைக் காட்சி துணிப்பு . (கு.வி)
5. திரைப்படத்தின் காட்சிமொழி – விளக்குக. (கு.வி)
6. நகுலன் - ஆசிரியர் குறிப்பு வரைக (சி.வி) பக் - 136
7. நகுலன் எழுதிய கவிதை நூல்கள் யாவை? (கு.வி)
8. தலைக் கோல் பற்றி எழுதுக *(சி.வி)
9. இசைக்கருவிகள் ஒலித்த முறை குறித்து எழுதுக. (கு.வி)
10. யாழின் வகைகள் யாவை? (கு.வி ) பக் 140
11. மாதவியோடு வந்திருந்த ஆசிரியர்கள் யாவர்? (கு.வி)
12. மாதவியின் நாட்டியம் குறித்து எழுதுக. (சி.வி) பக் 139
13. தொழுதனர் - உறுப்பிலக்கணம் தருக. (கு.வி)
14. சிலப்பதிகாரத்திற்கு வழங்கப்படும் வேறுபெயர்கள் ( கு.வி)
15. இளிவரல் - எனும் மெய்ப்பாட்டை சான்று தந்து விளக்குக. (சி.வி) பக் - 142
16. நகை – எனும் மெய்பாட்டை சான்றுடன் விளக்குக( சி.வி)
17. அழுகை –எனும் மெய்ப்பாட்டை சான்றுடன் விளக்குக ( சி.வி)
18. காப்பியத்தைக் குறிக்கும் பிறபெயர்கள் - (கு. வி)
19. காதை, சருக்கம், இலம்பகம், படலம், காண்டம் போன்றவை அமைந்துள்ள நூல்களை மேற்கண்டவழி நிரல்படுத்துக. (கு.வி)
20. ஐம்பெருங்காப்பியம் என்ற சொற்றொடரைக் குறிப்பிடும் நூல்கள் யாவை? (கு.வி)
21. தண்டியலங்காரம் கொண்டுள்ள செய்யுள் வகைகள் யாவை?
22. தொடர்நிலை என்ற செய்யுள் வகை குறித்து எழுதுக.(கு.வி)
23. பெருங்காப்பியத்தின் இலக்கணங்களுள் நான்கினை எழுதுக. (சி.வி) பக் - 150

## இயல்:7

| குறுவினா: | சிறுவினா | நெடுவினா |
|---|---|---|
| 1, 3, 4* | 1,2, 4 | 1,2, 3 |

**உட்பகுதி வினாக்கள்( சிறுவினா) (குறுவினா)**

1. நேர மேலாண்மை சான்றான குறள் எழுது (கு.வி)
2. வேளாண் மேலான்மைக்கு கம்பர்தரும் சான்று? (கு.வி)
3. ஹிராக்ளிடஸ் மனித வாழ்வுக்கும் வர்த்தகத்திற்கும் பெருந்துமாறு கூறிய கோட்பாடு யாது? (கு.வி)
4. கவிஞர் தமிழ்நதிஎ- குறிப்பு வரைக (சி.வி)
5. கவிஞர் தமிழ்நதி எழுதிய நாவல்கள் (கு.வி)
6. கவிஞர் தமிழ்நதி எழுதிய கவிதைகள் (கு.வி)
7. கும்மிப்பாடல்கள் எந்தெந்த பெயர்களில் அழைக்கப்படுகின்றன (கு.வி) பக் 171
8. புறநானூற்றின் மொழி பெயர்ப்பு பற்றி எழுதுக (கு.வி) பக் - 173

9. பிசிராந்தையார் குறிப்பு வரைக. (கு.வி) பக் - 173
10. தொன்மம் என்றால் என்ன? (கு.வி )
11. தொன்மம் குறித்து இளம்பூரணர், பேராசிரியர் உரைகள் யாது? (சி.வி) பக் - 180
12. மாதவியின் நாட்டியம் குறித்து எழுதுக. (சி.வி) பக் 139
13. இந்தியத் தொன்மத்திற்கும் கிரேக்கத் தொன்மத்திற்கும் உள்ள ஒப்புமைகளை எழுதுக. (சி.வி) பக் - 181

## இயல்:8

| குறுவினா: | சிறுவினா | நெடுவினா |
|---|---|---|
| **1, 4** | **1, 2, 3** | **1, 2** |

**உட்பகுதி வினாக்கள்( சிறுவினா) (குறுவினா)**

1. மயிலையாரின் ஆய்வுக் கட்டுரைகள் வெளியான இதழ்கள் (கு.வி) பக் - 190
2. மயிலை சீனி வேங்கடசாமி ஆய்வு செய்த துறைகள் (கு.வி) 190
3. மயிலையாரின் வரலாற்று ஆய்வுகள் குறித்து எழுதுக(சி.வி)
4. மயிலையாரின் இலக்கிய ஆய்வுகள் குறித்து எழுதுக (சி.வி)
5. மயிலையார் பற்றி நாரண துரைக்கண்ணன் கூறும் கருத்து யாது? (சி.வி)
6. சுகந்தி சுப்பிரமணியத்தின் படைப்புகள் யாவை? (சி.வி)
7. இரட்சனிய யாத்திரிகம் முதல் பதிப்பாக வெளிவந்த ஆண்டு மற்றும் இதழ் (கு.வி)
8. எச். ஓ. கிருஷ்ணபிள்ளை எழுதிய நூல்கள் (கு.வி) பக் - 193
9. ஏழு வள்ளல்களுடைய மலைகளின் வேறு பெயர்கள் (கு.வி)
10. அதியமான் நாடு குறித்து எழுதுக. (கு.வி ) பக் 202
11. காரியின் நாடு குறித்து எழுதுக. (கு.வி) பக் 202
12. பாரியின் நாடு குறித்து எழுதுக. (கு.வி) பக் 202
13. ஆய்நாடு குறித்து எழுதுக. (கு.வி) பக் 202
14. “அறிமடமும் சான்றோர்க்கு அணி” என்ற பழமொழி நானூற்றின் வரிகளுக்கு ஏற்ற வரலாற்று நிகழ்வை எழுதுக ( சி .வி) 203
15. புறநானூறு குறிப்பிடும் குமணவள்ளல் குறித்து எழுதுக. (சி.வி) 203
16. சிறுபாணாற்றுப்படை – நூற்குறிப்பு வரைக (சி.வி)
17. சிறுபாணன் பயணம் செய்த ஊர்களாக மா.ராசமணிக்கனார் கூறும் ஊர்கள் யாவை? (கு.வி)

மு.சங்கர் முதுகலைத் தமிழாசிரியர்